கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(04.08.2019 - 04 ஆவணி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 213, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

ஞான ஒளி
ඥාන ඕලි
GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

## திருத்தந்தையின் இம்மாத கருத்து

குடும்பங்கள் தங்கள் அன்பு இறைவேண்டலின் வாழ்வால் உண்மையின் தெளிவின் வழியாக மானிடத்துக்கு நல்ல பாடசாலைகளாக விளங்கும்படி செபிப்போம்.



# எமது மக்களுக்கு நியாயம் வழங்காத எந்த அரசுக்கும் எனது ஒத்துழைப்பு கிடைக்காது!

### விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு வலிவுறுத்தினார்.

பாஸ்கு தாக்குதல் பற்றிய சரியாக ஆராய்ந்து குற்றவாளிகளை நீதியின்முன் நிறுத்தி எமது மக்களுக்கு நியாயம் வழங்காத எந்த அரசுக்கும் எனது ஒத்துழைப்பு கிடைக்காது!

கடந்த புதன்கிழமை விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு வலிவுறுத்தினார். எமது நாட்டின் ஆளும் கட்சிக்கும் எதிர் கட்சிக்கும் ஏனைய அரசியல் கட்சிகளிடமும் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எமது நாட்டு மக்கள் இனங்களிடையே இருந்த பிணைப்பு, சுற்றுலாத்துறை, நாட்டு பொருளாதாரம் வீழ்ச்சியடைய காரணமான பாஸ்கு ஞாயிறு தாக்குதல் பற்றிய உண்மை நிலவரத்தை மூடி மறைக்காது ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஆராய்ந்து உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்துமாறு பேராயர் கர்தினால் அவர்கள் கூறினார்கள். இந்த ஊடக சந்திப்பில் செத்சரண இயக்குனர் அருட்பணி லோறன்ஸ் ராமநாயக்க அடிகளார், ஆயர் இல்ல மக்கள் தொடர்பாளர் அருட்பணி ஜூட் கிறிசாந்த அடிகளாரும் கலந்துகொண்டனர்.

◆◆◆◆

## சமாதானம், நல்லிணக்கம் வாழ்வாதாரம் பற்றிய மகாநாடு







இந்நாட்டில் பௌத்தர்களினதும் கத்தோலிக்கரினதும் பொறுமையினால் தான் மீண்டும் இரத்த ஆறு ஓடுவது தவிர்க்கப்பட்டது! வணக்கத்துக்குரிய பேராசிரியரான வெடரும் உபாலி தேரர் சமாதானம், நல்லிணக்கம் வாழ்வாதாரம் பற்றிய மகாநாட்டில் தெரிவித்தார்கள்.

மாவனல்ல நகரில் புத்தர் சிலையை உடைத்து நொருக்கியபோது பௌத்த தேரர்கள் வேண்டுகோளுக்காகவும், அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டுமொரு முறை இரத்த ஆறு ஓடவிடாது தடுக்கப்பட்டது. அஸ்கிரி விகாரதபதி பேராசிரியர் வெடருவே உபாலி தேரர் கடந்த செவ்வாய் கொழும்பு தாமரைத்தடாக கலைக்கூடத்தில் நடைபெற்ற சமாதானம், நல்லிணக்கம், வாழ்வாதாரம் பற்றிய தேசிய மகா மாநாட்டில் அஸ்கிரி விகாரை சார்பாக விஷேச...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## வாழ்த்துகின்றோம்

### பெயர் கொண்ட திருநாள்



பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சன் பர்னாந்து S.S.S ஆண்டகை 02.08.2019 அன்று தனது பெயர் கொண்ட தினத்தை நினைவுகூருகின்றார்.



கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் வியான்னி பர்னாந்து ஆண்டகை 04.08.2019 அன்று தனது பெயர் கொண்ட தினத்தை நினைவுகூருகின்றார்.

இவர்களை ஞானஒளி இறையாசீருடன் வாழ்த்துகின்றது.

## ஆவணி மாத மடு அன்னையின் திருவிழா

இம்மாதம் 15ம் திகதி மருதமடு திருத்தலத்தில் மடு அன்னையின் திருவிழா அதாவது அன்னையின் விண்ணேற்பு விழா இவ்வருடமும் வழமைப்போல் கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவை முன்னிட்டு 6ம் திகதி கொடியேற்றம். 14ம் திகதி மாலை 7 மணிக்கு மாலை ஆராதனையும் அடுத்த நாள் 15ம் திகதி திருவிழாவும் கொண்டாடப்படுகின்றது.

**கவனத்திற்கு: பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புடனும் பாதுகாப்புடனும் இத்திருவிழா கொண்டாடப்படும். மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான செயல்பாட்டுக்கு பொது மக்கள் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**– மன்னார் ஆயர்**

## தேவத்தை நோயாளர்கள் தினம்

தேவத்தை இலங்கை அன்னை பெசிலிக்கா தேவாலயத்தில் வருடாந்த நோயாளர் ஆசீர்வதித்தல் இறைவழிப்பாடு இவ்வருடமும் வழமைப்போல் ஒகஸ்ட் 25ம் திகதி ஞாயிறு பி. ப. 1.00 மணிக்கு நடைபெறும் என பசிலிக்கா பரிபாலகர் அருட்பணி விக்டர் ஜயமான்ன அடிகளார் தெரிவித்தார். கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற உள்ள இவ்வழிப்பாட்டில்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## குருத்துவ திருநிலைப்படுத்தலின் 25வது வருட வெள்ளிவிழாவைக் கொண்டாடிய அருட்தந்தையர்கள்.



தொடர்ச்சி 15ம் பக்கம்..

## நூற்றாண்டு விழா



தொடர்ச்சி 15ம் பக்கம்..

**என் தலைவரே தலைமுறை தோறும் நீரே என் புகலிடம் (தி.பா 90)**

## ஊடக வெளியீடு

### கொழும்பு பேராயர், ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று பாரிய அசௌகரியங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவார திட்டத்தினை விரிவுபடுத்தகின்றார்.

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் நடைபெற்ற தாக்குதல்களினால் ஏற்பட்ட சோக நிகழ்வுகள் இடம்பெற்று இரண்டு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. ஏப்ரல் 21ம் திகதி இடம்பெற்ற பாரிய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 350.7 மில்லியன் ரூபாய் நன்கொடைகளை வழங்கி வாடிக்கையாளர்கள், அரசு மற்றும் பெறுநிறுவனங்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் கொழும்பு பேராயருடன் கைகோர்த்துக்கொண்டனர். கொழும்பு பேராயரால் பெறப்பட்ட அனைத்து நன்கொடைகளும் ஒரு நிவாரண திட்டத்தின் மூலமாக தீவிரமாக நிர்வகிக்கப்பட்டு, இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் சமூக சேவைகள் பிரிவு Seth Sarana மற்றும் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தனிப்பட்ட முறையில் அந்தந்த குருக்கள் ஊடாக வழங்கப்படும்

கொழும்பு பேராயரின் இந்த நிவாரண திட்டத்தின் கீழ், பேராயத் சேத் சரண Caritas இயக்குனர் கௌரவ லாரன்ஸ் ராமநாயக்க அவர்களின் ஆதரவில் சமூக பாதுகாப்பு, தனிப்பட்ட மற்றும் குடும்ப மேம்பாட்டு நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. உளவியல் ஆலோசகர் Fr. Claude Nonis, குடும்ப சேவைகள் இயக்குனர் மற்றும் ஆன்மீக தொழில் ∴ வணக்கத்துக்குரிய பிரசாத் ஹர்ஷன ஆகியோரினால் சிறப்பு மிஷனரி நடாத்தப்படும்.

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று பாரிய அசௌகரியங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் உள்ளிட்ட மொத்மாக 168 பேருக்கு இன்று வரையில் 16.8 மில்லியன் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. காயங்களுக்கு உள்ளான 356 பேருக்கு உதவியாக அவர்களின் மருத்துவ செலவுகள், மருத்துவ அறிக்கைகளை பெறுதல், மருத்துவமனை கட்டணங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நடாத்தப்படும் அறுவை சிகிச்சைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், மருந்துகளை பெறுதல் ஆகியவற்றுக்காக 17.8 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட 354 குடும்பங்களின் கல்விக்கான உதவி மற்றும் சமூக நலனுக்காக பல்வேறு திட்டங்களை ஆரம்பிக்க 17 மில்லியன் ரூபாவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டவைக்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் உளவியல் ரீதியான மறுவாழ்விற்கான அதரவினை வழங்குவதற்காக கர்தினாலின் மேற்பார்வையின் கீழ் டயலொக் அறக்கட்டளையின் Rally to Care முன்முயற்சியால் கட்டுவாபிட்டிய பிரதேசத்தில் Life Healing Centre அமைக்கப்பட்டது, 20 தொழில்முறை ஆலோசகர்கள், 10 உளவியலாளர்கள், 17 மனநல மருத்துவர்களிடம் 770 க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் Life Healing Centre மூலமாக ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக்கொண்டார்கள். மற்றும் இன்று வரையில் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களின் வீடுகளுக்கு விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் உள்ள சியோன் தேவாலயத்தின் நிவாரணங்களில் கொழும்பு பேராயர் பங்கு கொள்ளாவிட்டாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கொழும்பு பேராயர் 10 மில்லியன் ரூபாய் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

பாரிய அசௌகரியங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக கொழும்பு பேராயர் மேலும் பல நிவாரண முயற்சிகளை மேற்கொள்கின்றார். இதில் வணக்கத்துக்குரிய Gihan Ridley அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் அரசாங்கத்துடன் இணைந்து நிரந்தர வதிவிடங்கள் இல்லாத மற்றும் வாடகைக்கு வாழும் மக்கள் வீடுகளை கட்டுவதற்கும் நிலங்களை கொள்வனவு செய்வதற்கும் 53.1 மில்லியன் ரூபாவினையும், பாதிக்கப்பட்டவர்களின் அன்றாட வாழ்க்கை செலவுகளுக்கு 35.2 மில்லியன் மதிப்பிலான நிவாரண நிதியும், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்காக 30.3 மில்லியன் ஒதக்கீடும், ஊனமுற்றவர்களின் மேலதிக மருத்துவ செலவுகளுக்காக 32 மில்லியன் ரூபாவும் மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நீண்ட கால கல்விக்காக பல்கலைக்கழக அனுமதி வரையில் 102.5 மில்லியன் ரூபாவும் மற்றும் கைகுழந்தை முதல் 5 வரையுள்ள குழந்தைகளுக்கான உதவி தொகையும் வழங்கப்படுகின்றது.

கொழும்பு பேராயர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நீண்ட கால முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்வார். பல்வேறுபட்ட மத மற்றும் ஆன்மீக மேம்பாட்டு திட்டங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும், உளவியல் ஆலோசகைகளை வழங்க 8 மில்லியன் ரூபாவும் மற்றும் அவசர நிலை மற்றும் சிறப்பு உதவி தேவைகளுக்கு 20 மில்லியன் ரூபாவும் நிவாரணமாக வழங்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட நிவாரண திட்டங்களை கொழும்பு பேராயர் மேற்கொண்டு வருவதுடன் அபேரத்ன மற்றும் நிறுவனம் கணக்காய்வும் செய்கின்றது.

# வெள்ளிவிழா கொண்டாடிய எம் அருட்தந்தையர்கள்



**அருட்பணி. பீட்டர் சுபராஜ் அடிகளார்**

**1994 சித்திரை 27**

**ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர். (தி.பா 136:1)**

பாரதம் என வர்ணிக்கப்படும்இந்திய மண்ணின், தூத்துக்குடி என்னும் நகரத்தில், இறைபதமடைந்த திரு திருமதி பீட்டர் மொறாயஸ் என்னும் தம்பதிகளின் மகனாக 1964ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ம் நாள் பிறந்தவர் அருட்பணி பீட்டர் சுபராஜ் அடிகளார். இறை அழைத்தலை தம் வாழ்வில் ஏற்று தன்னை கிளரீஷியன் சபைத் துறவியாக இறைவனுக்கு அர்ப்பணம்செய்ததன் விளைவாக, 1994ம் ஆண்டு சித்திரை மாதம் 27ம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இதனை அடுத்து கோட்டாறு எட்டாம் மறை பங்கின் உதவி பங்குத்தந்தையாகவும், வட இந்தியாவில் ஆதிவாசிகள் மத்தியில் மறைபரப்பாளராகவும், புனித கிளாரட் மோர்சி ஹோம் என்னும் பெண் குழந்தைகள்,சிறார்கள் காப்பு மையத்தின் அதிபராகவும், மற்றும் கருமத்தூர் பங்கின் உதவிப் பங்குத்தந்தையாகவும்... தொடர்ச்சி 15ம் பக்கம்..



**அருட்பணி. பிரகாஷ் பர்னாந்து அடிகளார்.**

**1994 ஆடி 30**

**ஆண்டவரின் பெயரைப் புகழுங்கள், ஆண்டவரின் ஊழியரே! அவரைப் புகழுங்கள் (தி.பா 135:1)**

ஏ.எம். பர்னாந்து அவர்களுக்கும் ஜொஸ்பின் பர்னாந்து அவர்களுக்கும் மூன்றாவது மகனாக பிறந்தவர். இவருக்கு ஒரு அண்ணனும் ஒரு அக்காவும் இருக்கிறார்கள். இவர் 1964ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம்திகதி கொழும்பு கொட்டாஞ்சேனையில் பிறந்தார். தற்போது இவரது குடும்பத்தினர் கொழும்பு மட்டக்குளியில் வசித்து வருகின்றனர். அருட்தந்தை அவர்கள் கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியில் தனது உயர்தர படிப்பை பூர்த்திசெய்து 1987ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம்திகதி தனது குருத்துவ அழைப்பை எதிர்நோக்கி கொழும்பு புனித அலோசியஸ் குருமடத்தில் இணைந்து குருத்துவ கல்வியை ஆரம்பித்தார். பின்பு களுத்துரை, அம்பிட்டி தேசிய குருமடங்களிலும் கல்வியை பூர்த்தி செய்து 1994ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் திகதி... தொடர்ச்சி 15ம் பக்கம்..

# குருத்துவ வாழ்வில் பொன்விழாக் கண்ட அருப்பணியாளர்கள்





14.05.2019 அன்று குருத்துவ அர்ப்பண வாழ்வின் பொன்விழாவை நிறைவுசெய்த மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலை பங்கைச் சேர்ந்த அருட்பணியாளர்கள், பர்னபாஸ் றெக்ஸ் குலாஸ் அ.ம.தி அடிகளார், மற்றும் அன்ரனி மொறையஸ் அ.ம.தி அடிகளார் ஆகியோரை ஞானஒளி வாழ்த்தி-நிற்கின்றது. மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருக்களாகிய அருட்பணியாளர்கள் அகில உலகத் திருஅவையில் பல பணிப் பொறுப்புக்களை சவால்கள் நிறைந்த காலத்தில் இறை அர்ப்பணிப்போடு செய்திருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி : மன்னா

## நீர்கொழும்பு பிரதேச பாடசாலை மாணவ மாணவியர்களுக்கான சித்திரைப்போட்டி...!

இறை ஊழியர் தோமஸ் கர்தினால் குரே அ.ம.தி ஆண்டகையின் 31வது ஞாபகார்த்தத்தை முன்கொண்டு நீர்கொழும்பு பிரதேச பாடசாலை மாணவ மாணவியர்களுக்கான சித்திரைப்போட்டி...!

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இறை ஊழியரான பென்ஜமின் கர்தினால் குரே அ.ம.தி ஆண்டகையின் புனிதராக பிரகடனப்படுத்தும் குழுவின் ஆலோசனைக்கேற்ப சித்திரைப் போட்டி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 'அவரின் புனித வாழ்வின் பலவித நிகழ்வுகளை முன்கொண்ட சித்திரம்' எதிர்பார்க்-கிறோம். தரம் 5, 6, 7, தரம் 8,9,10,11,12 பிரிவுகளாக நடைபெறும். முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் முறையே 5000.00, 4000.00, 3000.00 பெறுமதியான வவுச்சர்களையும் ஏனையவர்களுக்கு புனிதரின் உருவம் பொறித்த பரிசுல்களும் வழங்கப்படும். சித்திரங்கள் மாணவர்களின் சுய ஆக்கமென பாடசாலை அதிபர்களின் முத்திரையுடன் குறிப்பிட வேண்டும்.

14' - 18' அளவு தாளில் வரைய வேண்டும். 2019. 08. 31 முதல் நீர்கொழும்பு கமிட்டி கர்தினால் குரே நடுநிலைய்தில் 'ஞானார்த்த பிரதீபய காரியாலயத்தில்" திங்கள் காலை 8.30 - பி. ப 4.00 மணிவரை ஒப்படைக்க வேண்டும். அல்லது அருட்பணி ஊழியர் அ.ம.தி இல. 479, கனே வீதி, இறாகமை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

◆◆◆





இத்தாலி நாட்டின் ரோம் திருச்சபையின் 1100 மேற்றிராசனங்களை மேற்பார்வை செய்யும் மொண்சிங்னர் கமிலஸ் நிமலன் ஜோண்பிள்ளை நேற்று (23) மட்டக்களப்புக்கு விஜயம் செய்து மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகையுடன் ஆயர் இல்லத்தில் மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தார். பின்பு முழு மனிதனின் வளர்ச்சிதான் திருச்சபையின் நோக்கம் எனும் தொனிப்பொருளில் மக்களிற்கு நேரடியாகப் பணி புரியும் மட்டக்களப்பு எகட் தன்னார்வத் தொன்டு நிறுவனத்தினால் மனித சமூகத்திற்கு வழங்கும்... தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
04 ஆவணி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# விண்ணேற்பு என்பது நம் கண்களால் காணமுடியாத மறு உலக வாழ்வு

"அன்னை மரியாள் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள்" என்ற ஒரு விசுவாசக் கோட்பாடு, அவளுடைய "அமல உற்பவி" என்ற உண்மையின் தொடர்ச்சியாக அந்த விசுவாசத்தை நிறைவு செய்வதாக அமைகின்றது. பாவத்தின் விளைவே மரணம் என்றால், எவ்விதமான பாவ மாசுமே இல்லாத அன்னை மரியாள் எப்படிச் சாக முடியும்? என்று சிந்தித்தவர்கள், அன்னை மரியாள் மரிக்கவே இல்லை, உயிரோடு இருக்கும்போதே, உடலோடும் ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள் என்றனர். ஆனால் மற்றொரு சாரார், அன்னை மரியாளும் மற்ற மனிதப் பிறவிகளைப் போல் இறந்திருக்க வேண்டும். இயேசுவே சிலுவையில் மரித்த பின்புதான் உயிர்த்தார். அவரிடமும் தான் பாவமே இல்லை, அவர் இறைமகன் வேறு! அவரே இறந்தார் எனில் அன்னை மரியாளுக்கு மட்டும் ஏன் மரணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும்? அவள் இறப்பிற்குப் பிறகுதான் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றனர். (திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு சில புத்தகங்களில் அன்னை மரியாள் இறப்பைப் பற்றி ஒரு சில செய்திகள் காணக்கிடக்கின்றன) இந்த இரண்டு கூற்றுக்களிலுமே நியாயம் இருப்பதாக நினைத்தது திருச்சபை. எனவே பாவமில்லாமல் வாழ்ந்த அன்னை மரியாளை, அவளது உடலை அழிந்துபோகக் கடவுள் விடமாட்டார் என்பதால், "இவ்வுலக வாழ்வின் இறுதியில் இறந்து, அன்னை மரியாள் தன் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள்" என்று 1950இல் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் விசுவாசப் பிரகடனம் செய்தார். அதனடிப்படையில் இம்மாதம் 15ம் திகதி நாம் அனைவரும் அன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

விண்ணேற்பு என்பது நம் கண்களால் காணமுடியாத மறு உலக வாழ்வு, அவற்றை நாம் அடைய வேண்டுமானால் நம் கண்களால் காணக்கூடிய இவ்வுலக வாழ்வு நல்ல கிறிஸ்தவ வாழ்வாக அமையவேண்டும். பல சமயங்களில், இறப்பிற்குப் பிறகு வரக்கூடிய வாழ்வைப் பற்றி யோசித்துக் கொண்டே, இறப்பிற்குப் முன் இருக்கின்ற வாழ்வை மறந்துவிடுகின்றோம். இந்த வாழ்வைப் பொறுத்தே அந்த வாழ்வு அமையப் போகிறது அல்லவா? அதேபோல் ஒரு சிலர் மரணத்தைப் பற்றி யோசித்துக் கொண்டே அல்லது பயந்துகொண்டே "வாழ்வை" பறிகொடுத்துவிடுவர். "மரணத்தைப் பற்றி எதுவும் அறியமுடியவில்லையே" என்பவர்கள் முதலில் வாழ்வைப் பற்றி அறிந்துவிட்டார்களா? என்று கேட்டுப் பார்க்க வேண்டும்.

வாழ்வும், மரணமும் ஒன்றையொன்று தழுவி, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக, இரண்டுமே நம்மால் புரிந்துகொள்ள முடியாத மறைபொருட்களாக உள்ளன. "திருமணி ஆராதனை" என்ற ஒரு செபப் புத்தகத்தில் வருகின்ற ஓர் அருமையான வாசகம் "மெழுகுதிரி எரிய, எரிய குறைகின்றது, குறைய குறைய அது எரிகிறது. அதுபோல் ஓ மனிதா! நீ ஜீவிக்க, ஜீவிக்க உன் வாழ்நாள் குறைகிறது. உன் வாழ்நாள் குறைய குறைய நீ ஜீவிக்கிறாய்" நாம் உயிர் வாழும் ஒவ்வொரு வினாடியும், மரணத்தையும், வாழ்வையும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். நம் மூச்சை உள்ளே இழுக்கும்போது அது வாழ்வையும், நாம் மூச்சை வெளியே விடும்போது அது மரணத்தையும் குறிக்கின்றது. எனவே எமது வாழ்வை விண்ணக வாழ்வை நோக்கிய வாழ்வாக மாற்றுவோம். இயேசு எமக்காக ஆயத்தம் பண்ணியிருக்கும் இடத்தை நோக்கிச் செல்ல இறைவனிடம் வேண்டுவோம்.

மேலும் இம்மாதம் தங்களது குருத்துவ வாழ்வின் 25வது மற்றும் 50வது ஆண்டு விழாவைக் கொண்டாடிய அனைத்து குருவானவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, எனது செபத்தில் அவர்களையும் நினைவுகூர்கின்றேன்.

இறையாசீருடன் ஆசிரியர்

# அன்னை மரியின் விண்ணேற்புப் பெருவிழா



ஆவணி 15 (கடன் திருநாள்)

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. எம் மீட்பராம் கடவுளை நினைத்து என் மனம் பேருவகை கொள்கின்றது என்று இறைவனைப் போற்றிய விண்ணேற்பு அன்னையின் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அன்னை மரியா எலிசபெத்தைச் சந்திக்கச் சென்றபோது, எலிசபெத் மரியாவை வாழ்த்துகிறார். அவர் வாழ்த்தைக் கேட்டவுடன் அன்னை மரியாள் உவகையுடன் பாடிய பாடல் வரிகளுள் சில (லூக் 1:39-56). "அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பி விடுகிறார். தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்" என்ற வரிகள் விண்ணேற்பு அடைந்த வெற்றி நாயகியின் விடுதலை கீதமாகும்.

அரசியல், பொருளாதாரம், சமத்துவ சமுதாயத்திற்கு வித்திட்ட சுதந்திர கீதம். நலிவுற்றோர்க்குக் குரல் கொடுக்கும் உரிமைக் கீதம். வாழ்க்கையில் தாழ்நிலையில் உள்ளவரைத் தூக்கிவிடும் பரிவு கீதம். இவ்விடுதலையைத் தந்து கொண்டிருக்கும் இறைவனைப் புகழும் புகழ்ச்சிக் கீதம். இவ்வாழ்த்துக்களின் மகிழ்வோடு நம் திருஅவை கொண்டாடும் அன்னை மரியின் விண்ணேற்புப் பெருவிழா ஒரு கடன் திருவிழாவாகும்.

நமது கத்தோலிக்கத் திருஅவையின் நம்பிக்கையின் படி தனது உலக வாழ்வின் முடிவுக்குப் பின் அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்று 1950ஆம் ஆண்டு திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதர் விசுவாச சத்தியமாக, அதிகாரப்பூர்வமாக பிரகடனப்படுத்தினார்.


இறப்பு என்பது பாவத்தின் விளைவு. எனவே அமல உற்பவியான பாவமறியாத மரியாவை மரணம் எப்படித் தீண்ட முடியும்? எனவே, அன்னை மரியாள் மரணத்தின் பிடியில் சிக்காமல் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார் என்ற மரபு பசுமையாக இருந்து வருகிறது. இது வெறும் ஒரு திருவிழா அல்ல, பாவத்தை விலக்கி, தூய வாழ்விற்கு நம்மை அழைத்துச் செல்லும் ஒரு நிகழ்வு. இது வெறும் கொண்டாட்டம் அல்ல, விண்ணையும் மண்ணையும் இணைத்த ஓர் அற்புத நிகழ்வு. அன்னை மரியின் விண்ணேற்றம் நம் அனைவரின் விண்ணேற்றத்திற்கும் ஒரு முன் அடையாளம். நாம் அனைவருமே இறைத் திட்டத்தின் பங்காளிகள் ஆவதனை உறுதிப்படுத்தும் பெருவிழாவாகும். இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. மரியா இறைவனின் அன்னையாக இருப்பதால் முதலில் அந்தப் பேறு அவளுக்கு அருளப்பட்டது. அன்னை மரியாள் இயேசுவை தம் உள்ளத்தில் ஏற்று, உதரத்தில் தாங்கி, அவருடைய உணர்வுகளோடு ஒன்றாகி மீட்புத் திட்டத்தில் முழுமையாகத் துணை நின்றதால், அவள் இயேசுவின் உயிர்ப்பில் முதன்மையாகப் பங்குபெறுவது தகுதியான ஒன்றாகக் கருதப்படுகிறது.

மேலும் அன்னை மரியாவின் வாழ்க்கை துன்பங்களும், பாடுகளின் ஊடேயான பயணமும் தான். இத்தகு பயணத்தின் முடிவுதான் விண்ணேற்பு. நாமும் இவ்வுலகில் அனுபவிக்கும் துன்பத் துயரங்கள், வியாதி வருத்தங்கள், போராட்டங்கள் எதுவும் நிரந்தரம் அல்ல, இறைவனைப் பற்றிப் பிடித்து வாழ்வோருக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. இவை அனைத்தையும் அன்னை மரியாவைப் போல துன்பங்கள் இறைச்சித்தமே என்று பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனித வியாகுலங்களில் நிலைகுலைந்து விடாமல், "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவா 2:5) என்ற அன்னை மரியாவின் வார்த்தைகளை ஏற்று, இறைச் சித்தத்திற்கு இசைந்து வாழ்ந்தால் நாமும் ஒரு நாள் நம் அன்னையைப் போல் விண்ணேற்பு அடைவோம் என்பது நிச்சயம்! ❖❖❖❖❖❖

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# உன்னை நான் சந்தித்தால்...!



நமது இல்லத்தில் உள்ள வயது முதிர்ந்த ஒவ்வொருவரும் வாழ்ந்து முடித்தவர்கள் அல்ல, நமது வாழ்க்கைக்கு நம்பிக்கை தரும் விண்மீன்கள், அவர்கள் குணத்தால் குழந்தைகள், தங்கள் அனுபவத்தால் ஞானிகள். நம் வீட்டில் நடமாடும் சிமியோன்கள், அன்னாள்கள். இயேசுவை நாமும் சந்திக்க நமக்கு நல்ல வழிகாட்டிகள்.

## சந்திப்பே உறவின் ஆரம்பம்

நமது சந்திப்புக்கள்தான் எத்தனை விதங்கள்! எத்தனை இரகங்கள்!

சில சந்திப்புகள் வளர்பிறையாக.... தொடர்கதையாக வளர்கின்றன. வேறு சில சந்திப்புகள் தேய்பிறையாக.... குறைப்பிரசவமாக முடிகின்றன.

சில சந்திப்புகள் நெஞ்சிலே கரும்பாய் இனிக்கின்றன. நினைக்க நினைக்க தித்திக்கும் தேனாய், பாகாய்ச் சுவை தருகின்றன. வேறு சில சந்திப்புகள் எட்டிக்காயாய்க் கசக்கின்றன.

சில சந்திப்புக்களுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்றோம். வேறு சில சந்திப்புக்களை நிகழாமல் தவிர்ப்பதற்கு மோடிவித்தைகள், செப்படி வித்தைகள் அத்தனையையும் செய்து பார்த்து விடுகிறோம். சிலரைச் சந்திக்கும்போது வாட்டும் நோயும் காற்றாய் பறந்து விடுகிறது. வேறு சிலரைச் சந்திக்கும்போது வேதனையும் வருத்தமும் தான் மிஞ்சுகிறது. சில சந்திப்புகள்

**என்ன தவம் செய்தோம் நாம்** என்று எண்ணும் அளவுக்கு **உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல, உன்னைத் தேடாத நெஞ்சும் நெஞ்சல்ல** எனும் பாடல் வரிகளுக்கு ஒப்ப நம் ஏக்கத்தில் உதித்து, இதயத்தில் நுழைந்து, நல்லுறவாய் மலர்ந்து விடுகின்றன. வேறு சில சந்திப்புகள் நம் இதயத்தைக் காயப்படுத்தி நம் மனதிலும் நினைவிலும் நீங்காத வடுக்களை விட்டுச் செல்கின்றன.

ஒரு சில மனிதர்கள் நம் கண்முன்னே வந்து போனாலும் நம் கண்களுக்குள் அகப்படுவதில்லை. வேறு சில மனிதர்கள் நாம் பார்வையால் படம் பிடித்தாலும் அவர்கள் நம் இதயம் வரை நுழைவதில்லை. இன்னும் சில மனிதர்கள் நம் பார்வையில் சிக்கி, இதயத்தைத் தொட்டுவிட்டாலும் நம் பாச வலையில் சிக்குவதில்லை. சில மனிதர்களுக்கு நம் உறவுப் புத்தகத்தில் ஓர் அத்தியாயம் நிச்சயம்.

வேறு சில மனிதர்கள் நமது காலச் சுவட்டில் பதிவு செய்யும் அளவுக்கு உறவு கொள்ள வந்தாலும் பதிவு செய்தமை காய்வதற்குள் அவர்கள் உறவு, கம்பி அறுத்து போய் நிற்கும் தொலைபேசிக் கம்பமாகி விடுகிறது. நமது ஒவ்வொரு சந்திப்பும் நலம் தரும் உறவின் விதையாகிவிட்டால்

- நம்மைப் பழித்துரைக்கும் பகைவர் நமக்குண்டோ?
- நமக்கு தீவினை செய்யவல்ல தீயோர் நமக்குண்டோ?
- நமக்குக் கேடு வருவிக்கும் கொடியோர் நமக்குண்டோ?
- நம்மை வஞ்சித்து வாழும் வஞ்சகன் நமக்குண்டோ?

நல்லுறவை வளர்க்கும் சந்திப்புகள் நம் வாழ்க்கையில் எப்போதும் குறிஞ்சிப் பூக்கள் தானே! அத்திப்பூ பூத்தாற்போல்தானே!

## காத்திருத்தலும் எதிர்பார்த்தலும்

எதிர்பாராத சந்திப்புகள் இன்ப அதிர்ச்சி தரக்கூடியவை. ஆனால் ஒருவர் இச்சந்திப்புக்காக பல ஆண்டுகள் எதிர்பார்த்திருந்தால், நம்பிக்கை இழக்காமல் காத்திருந்தால் அப்படி நிகழும் சந்திப்பை எப்படி வர்ணிப்பது.

**நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி**

என்று தானே பவுலடியார் கூறுகிறார் (எபி 11:1). இப்படி நம்பிக்கை என்னும் ஒளி தரும் மின் கம்பங்களாய், உறுதிகொண்ட நெஞ்சினராய் இயேசுவின் (மீட்பரின்) சந்திப்பிற்காய் எதிர்பார்த்திருந்தவர்கள்தான், காத்திருந்தவர்கள்தான் சிமியோனும், எண்பத்து நான்கு வயது தழுவிய மூதாட்டி அன்னாவும்.

மரியாவும் தனக்குத் தாய்மைச் சடங்கு நிறைவேற்ற (ஆண் குழந்தையெனில் 40வது நாள்; பெண் குழந்தையெனில் 80வது நாள் - லேவி 12) குழந்தை இயேசுவுடன் எருசலேம் ஆலயம் சென்றபோது சந்திக்க வாய்ப்பு பெற்றது இவ்விரு மாமனிதர்களையும் தான்.

சிமியோன் என்ற பெயருக்கு **இறைவன் கேட்கிறார்** என்று பொருள். சிமியோன் நேர்மையாளர்; இறைப்பற்றாளர்; இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர்; தூய ஆவியின் வல்லமையைப் பெற்றிருந்தவர்; **மெசியாவைக் (மீட்பர்) காணுமுன் இறப்பதில்லை** என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டவர் (லூக்2:25-27). இறைவன் இவருக்குச் செவிமடுப்பதற்கு இதைவிட வேறு என்ன தகுதி வேண்டும்.

குழந்தை இயேசுவை அவர் சந்தித்ததின் மூலம் பிற இனத்தாருக்கு ஒளியாக வெளிப்படுத்தப்பட்ட, அதே வேளையில் இஸ்ராயேல் மக்களுக்கு மகிமையாக விளங்கிய, மீட்பை அவரால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. இயேசுவைச் சந்திக்கும் நோக்கத்திற்காகவே அவர் உயிர் உடலில் ஒட்டிக்கொண்டிருந்தது என்பதை **உம் அடியான் என்னை இப்போ அமைதியுடன் அனுப்பும்** (புனித. லூக் 2:29) என்ற சிமியோனின் வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன.

இயேசு - சிமியோனின் சந்திப்பின் பயனாகச் சிமியோனுக்கு அமைதி கிடைக்கிறது; பிற இனத்தாருக்கு ஒளி கிடைக்கிறது; இஸ்ராயேலுக்கு மகிமை கிடைக்கிறது; உலகினருக்கு அதுவே ஒட்டுமொத்த மீட்பாக மாறுகிறது (புனித லூக் 2:30-32). சிமியோன் இத்தகைய நல்லாசி கூறுவதோடு முடித்துக்கொள்ளவில்லை. பசப்பு மொழியில்லாத அவரது வார்த்தைகள் தொடருகின்றன. தராசின் அளவு கோல், மையத்தில் நெறிபிறழாது நின்று எடைகாட்டுவது போல் அவரது இறைவாக்குத் துல்லியமாக, அப்பட்டமாக வெளிப்படுகிறது. இக்குழந்தையால் தீமையையும் நன்மையையும் வேறுபடுத்திப் பார்க்க முடியுமாதலால் தீமையின் வீழ்ச்சியையும் நன்மையின் எழுச்சியும் இனி தடுக்க முடியாது; இக்குழந்தை எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கும் (புனித லூக் 2:34).

ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகள் அன்னா, இவர் ஒரு இறைவாக்கினி; இவரது பெயருக்கு ஏற்றபடி இரக்கம் நிறைந்தவர்; வயது முதிர்ந்தவர்; மணமாகி ஏழு ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்து கைம்பெண் ஆனவர்; நம்பிக்கை தளராதவர்; மன்றாடத் தவறாதவர்; திருப்பணி புரிய மறவாதவர் (புனித லூக் 2:36-37). இயேசுவின் சந்திப்பு இப்படிப் பட்டவர்களை விடுத்து வேறு யாருக்குக் கிடைக்கும்.

## முதியோரும் குழந்தைகளும் குணத்தால் ஒன்று

பொருள்களுக்கு வயது கூடக்கூட அதன் வலிமையும், பயன்பாடும் குறையும். ஆனால் மனிதனுக்கு வயது கூடக்கூட அவன் ஒரு பயன்படுபொருள் என்ற நிலையில் அவனது வலிமையும், பயனும் குறைந்தாலும் அவன் ஒரு அறிவு ஜீவி என்னும் நிலையில் அவனுக்கு ஞானமும், அறிவும் நுண்மதியும் கூடும்.

**ஆள்வர்க்கே முத்தோரின் துணை வேண்டுமெனில் நம்மைப் போன்ற சாமானியர்களுக்கு எப்படி? ஒரு வீட்டில் முதியோர் இருப்பதே இறை ஆசீரின் அடையாளம், அவர்கள் இறைவனின் கொடை, வாழ்வின் நிறைவு.**

சில நாட்களுக்கு முன் 100 வயது கண்ட ஒரு மூதாட்டியைத் தேடிச் சென்று ஆசி பெற்ற அனுபவம் எனக்கு இன்னும் மனதில் எழுச்சியைத் தருகிறது. நான் குழந்தையாக இருந்தபோது என் தாய்வழிப் பெற்றோர் என்னைப் பேணிக்காத்த அனுபவமும், தந்தை வழிப்பாட்டி என் பிஞ்சு மனதில் பதித்துச்சென்ற ஞானமுத்துக்களும் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து என் சிந்தனையை இன்னும்மெருகூட்டி வருகிறது.

இன்று பல குடும்பங்களில் முதியோரின் நிலை தலைகுனிய வைக்கிறது.

இன்று பல குழந்தைகள் தாத்தா - பாட்டியைப் பார்ப்பதே அபூர்வம். பட்டணத்தில் வாழ்கிறோம் என்ற சாக்கில் 'பட்டணத்தில் சிறிய வீடு; நாங்களும் பிள்ளைகளும் தங்குவதே சிரமம்' என்று தங்கள் இயலாமைக்கு நியாயம் கற்பித்து முதிய பெற்றோரை உறவு பிரித்து, அனாதையாக, நடைபிணமாக, கிராமங்களில் நடைபயில விட்டு அழகு பார்க்கின்றனர் ஒருசாரார்.

பாகம் பிரிக்கும்வரை பாசம் பொழிவதுபோல் நடித்து எல்லாவற்றையும் பிடிங்கிக்கொண்டு முதியவர்களைப் பிச்சைக்காரர்களாய் நடுத்தெருவில் நிற்க வைக்கிறது இன்னொரு கூட்டம்.

வயதான பெற்றோருக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை, மரியாதையை, அன்பைப் பாசத்தை மறுத்து தாங்கள் வேலைக்குச் செல்லும்போது தங்கள் குழந்தைகளைக் கவனிக்கத் தாதியாக, வீட்டுக் காவல்காரராக, சமையல்காரியாக மட்டுமே வயதான பெற்றோரை நடத்தும் மனிதர்கள் இன்று எத்தனை ஆயிரம் பேர்.

பயனற்றவர்கள், சாறு பிழியப்பட்ட சக்கைகள், சமூகத்தின் சுமைகள் என்று எண்ணி வயதானவர்களையெல்லாம் யூதர்களோடு கொன்று குவித்தான் ஜெர்மானிய நாட்டுப் பாசிசச் சர்வாதிகாரி ஹிட்லர்.

**அவனை மிஞ்சும் நிலையில் இன்று நமது குடும்பங்களில் தம்சொந்த இரத்தப் பந்தங்கால் வயதில் மூத்த பெற்றோர் நடத்தப்படுகின்றனர் என்பது நிஜம்.**

"மோப்பக் குழையும் அனிச்சம்" என்பார் வள்ளுவர். அனிச்சமலர் ஒரு முறை முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும்போது, பலரது வீட்டில் முதியவர்களைப் படுத்தும் பாட்டில் அவர்களது முகங்கள் எத்தனைமுறை அனிச்ச மலராக வெந்து, நொந்து, நாணிக், குறுகி நிற்க வேண்டியிருக்கும்!

**தந்தை – தாய்ப் பேண்!** நான்காம் கட்டளையில் படித்ததெல்லாம் இவர்களுக்கு ஏன் மறந்து போனது. முதியவர்கள் அனைவரும் ஒருவிதத்தில் பார்த்தால் குணத்தால் குழந்தைகள்தான்.

குழந்தை இயேசுவைக் கையில் ஏந்திய சிமியோன் குழந்தையாகவே மாறிவிடுகிறார். குழந்தையைப் போல் ஒளிவு மறைவின்றிச் சொல்ல விரும்பியதை மரியாவிடம் தெளிவாகச் சொல்லி விடுகிறார். சிமியோனின் ஆழ்ந்த அறிவும், ஞானமும் வெளிப்படுத்திய உண்மைகள் எதிர்காலச் சிந்தனைத் தெளிவுடன் இயேசுவை வளர்ப்பதற்கு மரியாவுக்குத் தனது, குழந்தையின் எதிர்காலம் பற்றிய தெளிவைத் தந்தது. மூதாட்டியார் அன்னா கைம்பெண்தான். ஆனால் விதவை என்பதால் இயேசுவின் திருமுக தரிசனம் அவருக்கு மறுக்கப்படவில்லையே!

அன்னாவை ஆலயத்தில் முன்னிலைப்படுத்தி, இயேசுவைச் சந்திக்கும் அரிய பேற்றை அவருக்கு நல்கி, இயேசுவைப் பற்றி எல்லோரிடமும் பேசும் தகுதியை அவருக்குக் கொடுக்கும் நற்செய்தியாளர் லூக்கா இதன்மூலம், **மங்களகரமான நிகழ்வுகளிலும் பொது நிகழ்வுகளிலும் கணவனை இழந்தோரை ஒதுக்கி, ஓரங்கட்டி அவர்களது மனவேதனையில் ஒய்யாரக் குளியல் நடத்தும் நம் சமூகத்திற்குச் சரியான சவுக்கடி கொடுக்கிறார்** என்றே சொல்ல வேண்டும்.

கைபிடித்தவனின் பொன்னுடல் தலைவாசலைத் தாண்டுமுன் கைபிடித்தவளைத் தலைமுழுகச் செய்யும் அவலங்களையும், பரிதாபங்களையும் இன்று லூக்கா நற்செய்தியாளர் நேரடியாகக் கண்டால் எப்படிக் குமுறுவாரோ?

நமது இல்லத்தில் உள்ள வயது முதிர்ந்த ஒவ்வொருவரும் வாழ்ந்து முடித்தவர்கள் அல்ல; நமது வாழ்க்கைக்கு நம்பிக்கை தரும் விண்மீன்கள்; அவர்கள் குணத்தால் குழந்தைகள்; தங்கள் அனுபவத்தால் ஞானிகள். நம் வீட்டில் நடமாடும் சிமியோன்கள்; அன்னாள்கள். இயேசுவை நாமும் சந்திக்க நமக்கு நல்ல வழிகாட்டிகள்.

*மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.....*






# இளமை ஒரு வரப்பிரசாதம்

## "எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் இயங்குவது இளமை"

நானும் இளைஞன் தான் - 25 ஆண்டுகளுக்கு முன்பு திரும்பக் கிடைக்காத அந்தத் தெய்வீக நாள்களை எப்போது நினைத்தாலும் என்னுள் இளமை துளிர்கிறது. கண்களில் கனவுகள் விரிய, எழுதும் கவிதையில் காதல் தெரிய, நடையிலும் பேச்சிலும், நளினமும் நையாண்டியும், நாடகத்தனமும் கலந்திருக்க, 'போர'டிக்கும் வகுப்புக்களைக் 'கட்' அடித்துவிட்டு பஸ் ஸ்டாப்பில் கூடி நின்று கூத்தடித்த காலங்கள் இன்றும் என் நினைவு ஏடுகளில் நிழற்படமாய் நிற்கின்றன.

"அப்பா, கொலேஜுக்குக் கிளம்புகிறேன். ஒரு 500 ரூபாய் குடுங்க. 'புக்ஸ்' வாங்கணும்" பையன் போகிற போக்கில் பணம் கேட்க. "அந்த பர்ஸ்ல எடுத்துக்கோ, கவனமாச் செலவு பண்ணு" என்கிறேன். ஆனாலும் 500 ரூபாய் எதுக்குக் கேட்கிறான்னு என் மனசுக்குள்ள சின்ன நெருடல். சரி நம்ம பையன் நல்லதுக்குத்தான் செலவு பண்ணுவான்ற நம்பிக்கை. எல்லாவற்றையும் பிள்ளைகளிடம் பேச முடியாமல் தவிக்கிற ஊமைப் பெற்றோராய் ஒதுங்கி நிற்கிறேன்.

500 ரூபாய்... அசால்ட்டா எடுத்துக்கிட்டுப் போறான். அந்தக் காலத்துல 5 ரூபாய்க்கு நான் அழுகையா அழுவேன். அப்புறமா அப்பா வந்து அம்பது பைசா குடுப்பார். பி.யு.சி முதல் பி.காம். வரை நான்காண்டுகள் கல்லூரியில் படிக்க நான் கட்டிய கொலேஜ் பீஸ் மொத்தமாய் 500 ரூபாய்தான் இருக்கும். அதைக் கட்டுறதுக்கே வீட்டில 'அடிபுடி'யாயிருந்த காலம் அது.

அந்த வறுமைக் காலத்தை எம் பசங்ககிட்டே அறிமுகப்படுத்த ஆசைதான். ஆனாலும் அவர்களுக்கு அதையெல்லாம் அறிந்துகொள்ள அவகாசமும் இல்லை. அவசியமும் இல்லை. என் கல்லூரி நாள்களில் கடைசி ஆண்டில் எனக்கொரு பரிசு தந்தார்கள். மூன்றாண்டுகளிலும் முதன்மை மாணவனாய் தேறியதற்கான பரிசு அது. கல்லூரி அரங்கில் விழா. ஏதோ ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் தாம் அன்றைய சிறப்பு விருந்தினர். மாணவர் கூட்டத்தில் நான்காவது வரிசையில் நான், அருகில் என் பேராசிரியர் அமர்ந்திருந்தார். பெயர் வாசிக்கப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவராய் மேடை ஏறிப் பரிசுகளைப் பெற்று போட்டோக்களுக்காய்ப் பளீரெனச் சிரித்து மகிழ்ச்சி பொங்க இருக்கைகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். என் பெயரும் வாசிக்கப்பட்டது. அத்தனை பெரிய கூட்டத்தில் மேடையேறப் போகிறோம் என்ற டென்ஷன். அடிவயிற்றில் ஒரு பட்டாம்பூச்சி பறப்பது போன்ற உணர்வு. கூட்டத்தில் ஆங்காங்கே அமர்ந்திருந்த இளம் பெண்களுக்கு ஒரு ஹீரோவாகக் காட்சி தரப்போகிறோம் என்கிற அதீத கற்பனை. அத்தனையும் ஒன்று சேர்ந்து உந்த, துள்ளி எழுந்த என்னுடைய ஹவாய் செருப்பு பட்டென்று பழிவாங்கிவிட்டது. அதைச் சரி செய்ய அவகாசமில்லை. செருப்பில்லாமலே மேடையேறி ஹீரோ நினைப்பெல்லாம் ஜீரோவாகிப் போன நிலையில் பரிசைப் பெற்றுக்கொண்டு இருக்கைக்கு வந்தேன்.

என் அருகிலிருந்த பேராசிரியர் எழுந்து கைகுலுக்கி என் காதருகே, "நீ தான் நல்ல பையன். பெரியவங்க இருக்கிற மேடைக்குப் போகும்போது செருப்பைக் கழட்டி வச்சுட்டுப் போனியே... வெரிகுட்... கீப் இட் அப்" அப்படீன்னு பாராட்டினார்.

என் உண்மை நிலவரம் அவருக்குத் தெரியாது. அந்த மாதிரிக் கஷ்டங்களையெல்லாம் இன்றைய இளைஞர்கள் அதிகம் அனுபவிப்பதில்லை. இன்றைக்கு எம் பையனுக்கு வீட்டுக்குள் ஒரு செருப்பு, வெளியில் இரண்டு வகைச் செருப்பு. இவை தவிர சாப்பாத்துக்கள் மூன்று ரகம். அதில் நைக் ஷுவும் உண்டு. அவன்கிட்டப் போய் அறுந்துபோன செருப்புக் கதையை ஆரம்பிச்சா அலறுவான். 'அம்மா, இவர் அறுவை தாங்க முடியலே'ன்னு

எங்களை இளமை நாள்களில் வழிகாட்ட ஆட்கள் இல்லை. இன்றோ, பிள்ளைகளுக்கு எதிர்காலம் பற்றிய தெளிவான சிந்தனை இருக்கிறது. என்ன படிக்கணும், என்னவாக உயரணும்ங்கிற எண்ணமே எங்களுக்கு இல்லை. கிடைச்சதைப் படிப்போம். படிச்சப்புறம் பார்த்துக்கலாம்ன்ற எங்க காலத்துச் சிந்தனைகள் இன்றைய இளைஞரிடம் எள்ளளவும் இல்லை. வெறியோடு அவர்கள் இயங்குவது நமக்கு ஆச்சரியமாகவும் பெருமையாகவும் இருக்கிறது.

கம்யூட்டர், டி.வி, செல்போன் இவையெல்லாம் கற்பனையில் கூடக் கண்டிராத காலம் எங்கள் காலம். இலங்கை வானொலிதான் எங்களது பொழுதுபோக்கு. இல்லைன்னா சினிமா தியேட்டர், புதுசா ரிலீசாகுற படங்களுக்காகப் போராடி டிக்கட் எடுக்க உழைத்துக் களைத்தவர்கள் நாங்கள். இன்றைக்கு படம் ரிலீசாகுமுன்பே 'விசிடி'யில் பார்த்துடுறான் நம்ம பையன். படித்த இளைஞரிடையே சினிமா பரபரப்பு போயே போயிடுச்சு. கல்வி கிடைக்காத இளைஞர் மட்டுமே இன்றைக்கும் திரையரங்குகளை ஆக்கிரமித்து ஆரவாரம் செய்கின்றனர். "காதல் துள்ளுகிற இளமையை அள்ளி வைக்கக் கிடைத்த வெள்ளிப் பாத்திரம்" என்று சொல்வர். இளமையில் காதல் உணர்வு எங்களிடமும் அரும்பி இருந்தது. ஆனால் வாய்ப்புகள் குறைவு. கோஎஜுகேஷன் கொடுப்பினை எங்களுக்கு இல்லை. எப்பவோ சில நேரம் பஸ் ஸ்டாப்புகளில் அல்லது பஸ்சுக்குள் பார்வைகளைப் பரிமாறுவோம். ஒரு பொண்ணு நம்மை இரண்டு தடவை பார்த்துட்டாலே பகலெல்லாம் பரவசமாகி இரவெல்லாம் கனவு காணுவோம். அடுத்த நாள் அந்தத் தேவதை பவனிவரும் தேருக்காய் (பஸ்சுக்காய்க்) காத்திருப்போம். கால்வலிதான் நமக்கு மிச்சம். ஒரு பெண் ஒருமுறை பார்த்தாலே பேசினாலோ காதல்னு கணக்குப் போட்ட காலம் அது.

இன்றைய இளைஞர்கள் L.K.G யிலிருந்து இணைந்து படிப்பதால் நட்புக்கும் காதலுக்கும் நடுவில் இருக்கும் கோட்டை நன்றாகவே அறிந்திருக்கிறார்கள். எல்லை மீறாமல் இணைந்து பழகிட இன்றைய இளைஞர்கள் நன்றாகவே தெரிந்திருக்கிறார்கள். நமக்குத்தான் அவர்களது நடவடிக்கைகள் மீது நம்பிக்கை வறட்சி, நாளடைவில் நம்பிக்கை நாற்றுகள் நிச்சியம் தளிர்க்கும்.

தகவல் தொடர்புப் புரட்சி இன்றைய இளமைக்கும் பெரிய வரப்பிரசாதம். கல்லூரிப் படிப்பு முடிக்கும் வரை எனக்கெல்லாம் டெலிபோனில் எப்படிப் பேசுவதென்றே தெரியாது. ரிசீவரை எடுத்துத் தலைகீழாக வைத்துக் காதில் வைக்க வேண்டிய பகுதியை வாயருகே வைத்து "அலோ அலோ" என்று அலறியவன் நான் ஆனால் ஆறாம் கிளாஸ் படிக்கிற எம் பையன் இன்டர்நெட், இ-மெயில், சிறைப்படுத்தி நம் வீட்டு அறைக்குள் கொண்டு வந்த விஞ்ஞான விந்தை நம் இளைஞரின் விழிகளுக்கு வெகுதொலைவு பார்க்கிற வீரியத்தைத் தந்துவிட்டது. இதில் வேதனையான விஷயங்களும் ஆங்காங்கே அரங்கேறினாலும் அடிப்படையாய் உள்ள நன்மைகளை மறுக்க முடியுமா?

அப்பிளிக்கேஷன் முதல் இன்டர்வியூ வரை இருந்த இடத்திலேயே இன்டர்நெட் வழியாக இன்றைய இளைஞர்களுக்குச் சாத்தியமானது சாதனையல்லவா? கிராமத்து இளைஞரும் "அவுட்சோர்சிங்" வாய்ப்புகளால் அமெரிக்காவை அடைய, ஆட்சி செய்ய இன்றைய உலகம் கதவு திறந்துவிட்டிருக்கிறதே. நாங்கள் கனவுகூடக் காணாத உயரங்களை இன்றைய எம் பிள்ளைகள் எட்டிப்பிடித்து ஏறி நின்று பெற்றோருக்கு எனப் பெருமை பெற்றுத் தருவது எமக்குக் கிடைத்த பேறு அல்லவா? எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் இயங்குவது இளமை. சுற்றுச்சூழல் காப்பதிலிருந்து சுனாமியில் மீட்பது வரை இளைஞர் பணிதான் நாட்டையே உயர்த்துவது. இன்றைய இளமையைக் காண்பதில் நேற்றைய இளமை நெஞ்சம் நெகிழ்கிறது. நிறைவாய் வாழ்த்துகிறது.

**இளமை ஒரு மாற்றத்திற்கானக் காலம் :**

ஏனெனில் உடலில், உளப்பாங்கில், சமூகத்தில், அரசியலில், திருச்சபையில், வாழ்வியல் சூழலில் மாற்றம் ஏற்படத் துடிக்கும் காலம்.

**இளமைத் தேடலின் காலம் :**

வாழ்வின் பொருள் என்ன என்று தேடுகிறது. இதற்குப் பெற்றோர், நண்பர்கள், பெரியவர்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றனர்.

**இளமை வேகத்தின் காலம் :**

உண்மையான அமைதி வேண்டுமானால் அலைகளை ஒதுக்கிவிட்டு கடலுக்குச் செல். அதன்பிறகு அலைகளை உன் விருப்பப்படி பயன்படுத்த முடியும் என்கிறது.

**இளமை எதிர்ப்பின் காலம். எதிர்பார்ப்பின் காலம் :**

இலட்சியங்களை அடையும் காலமும் கூட பறவைகள் கண்டம் விட்டு கண்டம் பறந்து செல்லும்போது வழியில் ஓய்வு எடுப்பதில்லையாம். இலக்கை (கண்டத்தை) அடைந்த பின்னர்தான் ஓய்வெடுக்கிறதாம். நம் இளைஞர்களின் பயணம் எதை நோக்கி உள்ளது?

**இளமை தங்கள் வாழ்வை திரும்பக் கட்டியெழுப்பும் காலம் :**

இங்கு யாரை ஏற்றுக்கொள்ள வேண்டும், யாரை ஏற்க வேண்டாம் என்று முடிவு எடுக்கப்படவும், கட்டமைக்கப்பட்ட மதிப்பீடுகளைக் கேள்வி கேட்கவும் இளமை தயங்குவதில்லை.



**இளமை என்பது மாபெரும் சக்தி :**

புதியன படைக்கும், புரட்சி வெடிக்கச் செய்யும். புதுமைகளை உருவாக்கும், அநீதிகளை அகற்றத் துடிக்கும், அழுகல் சமூகத்தின் அவலங்களை அகற்றி வாழ்வில் அடிமைத்தனத்தின் ஆணிவேரை ஆழம் கண்டு அடையாளப்படுத்தும், தடம்மாறும் தலைமையினைக் கண்டு கொதித்தெழும். அவர்களுள் எண்ணற்ற வினாக்கள் விடைகாணத் துடிக்கின்றன. ஏராளமாக புதிர்கள் விளக்கத்திற்காகக் காத்திருக்கின்றன.

**இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகள்**

1. சுய நம்பிக்கையின்மை
2. புரிந்துகொள்ளாமை
3. புறக்கணிப்பு
4. வறுமை
5. ஏமாற்றம்
6. வேலையில்லாத் திண்டாட்டம்
7. போதிய இலக்கின்மை
8. விளம்பர மாயையில் சிக்கித் தவிப்பு.



# இயேசுவின் உருமாற்றம்

உருமாற்றம் என்பது ஏற்கனவே கொண்டிருந்த ஓர் உருவத்திலிருந்தும் தோற்றத்திலிருந்தும் மாற்றம் பெறுதலாகும். ஏற்கனவே பெற்றிருந்த உருவமும் தோற்றமும் என்ன? இவ்வினாவிற்கு புனித பவுல் பதிலளி-க்கிறார். பிலி 2:6- 11இல் காணப்படும் பாடலில் இயேசு மனித “வடிவெடுத்துத்” தாழ்ந்து வருதலும், பின்னர் “ஆண்டவர்” என்ற உச்சநிலைக்கு உயர்த்தப்படுவதும் சித்தரிக்கப்படுகிறது.


1. கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று

2. மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.

3. எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக “இயேசு கிறிஸ்து ஆண்டவர்” என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

மூன்று அடிகளைக் கொண்ட இப்பாடலே இது எனக் கருதுபவர் பலர். இதன் முதல் பகுதி கடவுளுக்கு இணையான நிலையை இயேசு கவர்ந்து கொள்ளாமல் மனிதத் தன்மைக்கு, மேலும் அடிமை என்ற நிலைக்கு இறங்கி வருதலையும், இரண்டாம் பகுதி மனித நிலையிலேயே சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குத் தாழ்ந்து வருதலையும், மூன்றாம் பகுதி இறைவனுக்கு இணையான நிலையை அடைவதையும் சித்தரிக்கின்றன.

**ஆதாம் மனிதனாயிருந்தும் அதை மறந்து கடவுளைப் போல் ஆக முயன்றான். அவன் வீழ்ந்தான். இயேசுவோ பிறப்பிலிருந்தே கடவுளுக்கு இணையாக இருக்கும் மகிமையைத் தம்மேல் எடுத்துக் கொள்ளாமல் அந்நிலையைத் துறந்துவந்தார். காலம் நிறைவேறியபோது அவர் உயர்த்தப்பட்டார்.**



## இயேசுவின் மகிமை நிலை

இங்கே உயிர்த்த இயேசுவின் மகிமையான நிலை - நித்திய நிலை - தெய்வீக நிலை சித்தரிக்-கப்படுகிறது. “இயேசு கிறிஸ்து ஆண்டவர்” (பிலி 2:10-11, 2கொரி 12:3). விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவருக்கும் அவர் ஆண்டவர். இப்போது அவர் விண்ணக மனிதர், மகிமையான மெசியா (மாற் 8:38), கடவுளின் சாயல் (எபி 1:3), அழியாமை, ஆற்றல், மாட்சிமை பெற்று (எபி 1:3, 1கொரி 2:8) ஆவியை அளிக்கும் உடல் கொண்டவர் (மத் 12:28), ஒரு புதுப்படைப்பு. இந்நிலையில் அவரை இறைமகன், தந்தையோடு சமத்துவம் கொண்டவர். ஆண்டவர், குரு, மீட்பர், அரசர், நடுவர், தந்தையின் வலப்பக்கம் அமர்பவர், எப்பெயருக்கும் மேலான பெயர் பெற்றவர், ஆவியால் நிரப்பப்பட்டவர், படைப்பின் இரண்டாம் ஆதாம் என்றெல்லாம் புதுப்பெயர்கள் புனைந்து பெருமையோடு அவரை அழைக்க வேண்டும். ராபி - போதகர், இறைவாக்கினர் என்ற பெயர்களால் மட்டும் அழைத்தால் இது போதாது. அத்தோடு அனைவரின் ஆராதனைக்கும் உரியவர், எல்லாரும் அவர் முன் மண்டியிடுவர்.

## இயேசுவின் மண்ணக வாழ்வு நிலை

(அ) இயேசு மனிதராகப் பிறக்குபோதே இவ்வுயர் மகிமை நிலையைக் கொண்டிருந்திருக்க முடியும். ஆனால், அதை அவர் விரும்பவில்லை. மாறாக “மனிதருக்கு ஒப்பானார்”. மனித உருவில் தோன்றினார். மனித இயல்பால் மறைக்கப்பட்டது. அவர்தம் இறைமாட்சி. எனவேதான் ஒரு தச்சனை, மரியாவின் மகனை (மாற் 6:3) ஒரு போதகரை (மத் 19:16), அவரில் மக்கள் கண்டனர். உணர்ச்சி, பசிதாகம், களைப்பு, தூ க்கம், கனிவு, இரக்கம், சினம், சிறுவர்பாசம், திகில், மனக்கலக்கம் கொண்ட மனிதரை அவரில் கண்டனர். இது வெறும் தோற்றமன்று. இயேசு உண்மையான மனிதர் எனவும் உணர்ந்தனர்.

(ஆ) மேலும் நமக்காகப் பாவ உருவானார் இயேசு (2கொரி 5:21). பாவப்பிடியில் உள்ள நம்போன்ற மனித இயல்பைத் தாங்கினார் (உரோ 8:3). திருமுழுக்குப் பெற்றபோது தம்மைப் பாவிகளுக்கு இணையாக்கினார். பின்னர் சோதனைகளும் வந்தன. (எபி 4:15) ஆனால் பாவம் அறியாதவர். ஆயினும் பெருந்தீனிக்காரன், குடிகாரன், பாவிகளுக்குத் தோழன் என்று கூடப் பெயர் வாங்கினார் (லூக் 7:34).

(இ) “மேலும் அடிமையின் தன்மை பூண்டார்” திருமு-ழுக்கின் போது “துன்புறும் ஊழியராகத்” துலங்கினார். இதோ கடவுளுடைய செம்மறி (ஊழியன்), “இவரே உலகின் பாவங்களைப் போக்குபவர்” (யோவா 1:29). மானிடமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு விலையாகத் தம்முயிரை அளிக்கவும் வந்தார் (மாற் 10:45).

பலருக்காகச் சிந்தப்பட்டது அவரது இரத்தம் (மாற் 14:25). நானே உங்கள் நடுவே பணிவிடை புரிபவனைப் போல் இருக்கின்றேன் (லூக் 22:27, லூக் 4:16-21). காலடிகளைக் கழுவும் அடிமையின் செயலை அவர் செய்தார் (யோவா 13:1-7). தொடக்கத் திருச்சபையின் போதகத்தில் இயேசு யாவேயின் ஊழியராகச் சித்தரிக்கப்படுவது வழக்கம் (தி.ப 8:32-35, 1பேது 2:21-25, எசா 42:1-9, 49:1-13, 50:4-9, 52:13-53:12). இயேசுவின் மரணமும் இழிவான, சாப மரணம். செத்தாலும் இப்பச் சாகக்கூடாது என்று பலரும் பேசிக்கொள்ளும் சாவு!! சிலுவையில் சாகிறவனுக்குச் சாபம் கூறியது பழைய ஏற்பாடு (காண்க. கலா 3:13, இ.ச 21:23)

ஏன் இந்த இரு துருவங்கள்? ஏன் இன்று ஆண்டவராகிய இயேசு - ஏன் அன்று உலகிலே அடிமையான இயேசு?

ஏனெனில், உலகில் வாழத்தொடங்கிய முதல் நிமிடத்திலிருந்தே தாம் பெற்றிருக்கக் கூடிய தெய்வீக மகிமையைத் துறந்து வந்தார் இயேசு. (இயேசு இறைத்தன்மையைத் துறக்க முடியாது; ஆனால் இறைத்தன்மையிலிருந்து விளங்க வேண்டிய இறை மாட்சியை அவர் பற்றிக் கொள்ளவில்லை). இது மட்டுமா? வாழ்நாள் ஒவ்வொன்றுமே தம்மை வெறுமையாக்கும் செயலால் நிறைந்திருந்தது. மூன்று விதமான சோதனையின் போது, உலக அரசு - வீண் பெருமை - சுய திருப்தி ஆகியவற்றைத் தேடி மகிமையின் மெசியாவாகப் பணிபுரிவதை வெறுத்தொதுக்கினார். துன்பத்தின் வழியைத் தேர்ந்தெடுத்தார். மகிமையின் அரசை வெறுத்தார். (மத் 2:20, லூக் 24:13; யோவா 6:15; 12:14; திப 1:6). பாடுகளின் பாதையைத் தேர்ந்தெடுத்தார். பாடுபடக்கூடாது என்று பேதுரு அறிவுரை கூறுமிடத்து அவரைக் கண்டித்தார் (மாற் 8:31-33). கெத்சமனி தோட்டத்தில் “என் விருப்பமன்று, உம் விருப்பம்” என்றுரைத்துத் தந்தைக்குப் பணிந்தார் (மாற் 14:35-36). “சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிபவரானார்” (பிலி 2:8). “நமக்காகக் கிறிஸ்து சாபமானார்” (கலா 3:13). உண்மையில் அவர் செல்வமிக்கவராய் இருந்தும் நமக்காக ஏழையானார் (2கொரி 8:9). இயேசு தம் வாழ்வின் தொடக்கம் முதல் இறுதிவரை தம்மை வெறுமையாக்கிக் கொண்டே-யிருந்தார்.

ஆதாம் மனிதனாயிருந்தும் அதை மறந்து கடவுளைப் போல் ஆக முயன்றான். அவன் வீழ்ந்தான். இயேசுவோ பிறப்பிலிருந்தே கடவுளுக்கு இணையாக இருக்கும் மகிமையைத் தம்மேல் எடுத்துக் கொள்ளாமல் அந்நிலையைத் துறந்துவந்தார். காலம் நிறைவேறியபோது அவர் உயர்த்தப்பட்டார்.

## இயேசுவின் முன்னைய நிலை

பாடலின் முதல் அடி இயேசு “தம்மைத் தொடக்கத்திலேயே வெறுமையாக்கினார்” என்பதை அழுத்திக் கூறுகிறது. பிறப்பின்போதே பெற்றிருக்கக்கூடிய மகிமைகள் அனைத்தையும் முதல் நொடியிலிருந்தே துறந்தார். இதனால் “மனித உரு” என்பது “ஆண்டவர்” என்ற நிலைக்குரிய பெருமையைத் திரையிட்டு மறைத்துக் கொண்டிருந்தது.

ஆண்டவர் என்ற நிலையைத் தொடக்கத்-திலிருந்து கவர்ந்து கொள்ளாமல் மனிதன், பாவி, அடிமை சாபச் சாவு என்ற நிலையில் இயேசு இவ்வுலகில் உருத்தாங்கியிருந்தார் என்கிறார் பவுல் (பிலி 2:7)

ஒருநாள் இயேசு இந்த நிலையிலிருந்து ஒரு சில மணித்துளிகள் விடுபட்டாற்போல் தாபோர் மலையில் மகிமையான தோற்றம் தாங்கினார். இதையே உருமாற்றம், தோற்றமாற்றம் என்கின்றோம்.

“ஆறு நாள்களுக்குப் பின்பு, இயேசு பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள் முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின. அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள். பேதுரு இயேசுவைப் பார்த்து, “ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்” என்றார். தாம் சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த அச்சம் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட அந்த மேகத்தினின்று, “என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது. உடனடியாக அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். தங்கள் அருகில் இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. (மாற் 9:2-8)

## சிந்தனைக்கு

திருத்தந்தை புனித பெரிய சிங்கராயர் ஏற்கெனவே ஆண்டவர் அடைந்த உருமாற்றத்தின் நோக்கத்தைத் தெளிவாக விளக்கிவிட்டார். “நம்மை விலை கொடுத்து வாங்குவதற்காக ஆவலுடன் எதிர்-பார்த்துக்கொண்டிருந்த பாடுகள், சிறுமை நிறைந்த சிலுவைச் சாவு இவற்றிற்குச் சாட்சிகளாக இருக்கப்-போகும் சீடர்களின் மனம் பேதலித்து விடக்கூடாது என்று நினைத்ததின் பொருட்டே, ஆண்டவர் தம் தெய்வீக மகத்துவத்தைத் தம் பாடுகளுக்குச் சற்று முன்பாக இவர்களுக்குக் காட்டத் திருவுளமானார்.”

“அதே நேரத்தில், உலக முடிவு வரை தாம் அடித்தளமிட்டு உருவாக்கிய திருச்சபையின் உறுப்பினர்-களுக்கும் இத்தகைய மகத்துவமிக்க உருமாற்றம், உறுதி செய்யப்பட்டது. இதனால் அவர்கள் விசுவாச வாழ்வில் நிலைத்து நின்று வான்வீட்டில் தயார் நிலையில் இருக்கிற மணிமுடியைப் பெறவேண்டும் என்பதைப் புரியவைக்க வேண்டும்”.

இத்தகைய மகத்துவமிக்க உருமாற்றம் நமக்குக் காத்துக் கொண்டிருப்பதை ஆண்டவரே உறுதிபடக் கூறுகின்றார். “அப்போது நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவனைப் போல் ஒளி வீசுவர்” (மத் 13:43) இதையே தூய பவுல் அடியாரும் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் உறுதிப்படு-த்துகின்றார். “அவர் தமது ஆற்றலால் தாழ்வுக்குரிய தம் உடலை மாட்சிமைக்குரிய தமது உடலின் சாய-லாக உருமாற்றுவார்” (பிலிப் 3:21). எனவே நாம் செய்ய....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### பொதுக்காலத்தின் 18வது ஞாயிறு (04.08.2019)

▶▶ பேதுரு ◀◀

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 18வது வாரத்தின் முதல் நாளிலே இறையாலயம் வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! ஆசை பேராசையாக மாறும் போது அழிவைத் தேடுகின்றோம் என்பது நிதர்சனமாகின்றது. ஏனெனில் செல்வச் செருக்கினால் வாழ்வு வந்துவிடாது உலகச்செல்வம் நிலையற்றது. இக்கருத்துக்களையே இன்றைய நற்செய்தியானது நமக்கு எடுத்துரைக்கின்றது. இன்றைய மனிதர்களாகிய நாம் கண்களை விற்று சித்திரத்தை வாங்குகின்றோம். மகிழ்ச்சியையே விலையாகக் கொடுத்துப் பணத்தையும், பண்டங்களையும், வசதிகளையும் வாங்குவதையே பெரும் பயனாகக் கருதுகின்றோம். பணத்தையே குறியாக கொண்டு வாழும் நமக்கு இன்றைய வழிபாடு பாடம் புகட்டுகின்றது. இந்நிலையில் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனச் சிந்திக்க வேண்டும். நம்மிடம் இருக்கும் செல்வம் இல்லாதவரோடு பகிரப்படவேண்டும். அழிந்துபோகும் செல்வங்களைத் தேடாமல் அழியாத வாழ்வு தரும் செல்வமாகிய இறைவனை தேட வேண்டும் இதற்கான அருளை வேண்டிடப் பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**முதல் வாசகம் :** ச.உரை 1:2, 2:21-23

உழைத்து சேர்த்த சொத்தை அதற்காக உழைத்தவர்களுக்கு விட்டுச் செல்கிறார்.

**பதிலுரைப் பாடல் :**

என் தலைவரே தலைமுறை தோறும் நீரே எங்கள் புகலிடம்.

**இரண்டாம் வாசகம் :** கொலோ 3:1-5,9-11

மேலுலகு சார்ந்தவற்றையே எண்ணுங்கள்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா அல்லேலூயா ஏழைகளின் உள்ளத்தோரே பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் :** லூக் 12:13-21

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

செல்வச் செருக்கினால் வாழ்வு வந்துவிடாது, நம்மிடம் இருக்கும் செல்வங்களை பகிர்ந்து வாழ்வதன் மூலம் உண்மையான மகிழ்ச்சியை அடையமுடியும் என்ற உண்மையை நமக்கு கற்பிக்கும் திருஅவையையும் அதன் உடன் உழைப்பாளிகளான திருத்தந்தை, ஆயர்கள் அருட்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உமது அருளாசியை வழங்கிட வேண்டுமென்று...

பட்டம், பதவி, பணம், பொருள், சொத்து, சுகம் இவற்றுக்காக இன, மத, மொழி, பேதங்களை உருவாக்கி மக்களை கூறுபோட்டு அடுத்தவர் நலனில் அக்கறை இல்லாமல் சுயநலத்தோடு வாழும் தலைவர்களும் மக்களும் மனமாற்றம் பெற்று நாட்டில் உள்ள மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று...

வாழ்வின் மகிழ்ச்சிக்கு மூல ஆதாரமாக விளங்குவது இறை ஞானமே என்பதை மனதில் கொண்டு இறையரசு என்ற செல்வத்தைத் தேடுபவர்களாக நாம் வாழவும், அழிந்து போகும் இவ்வுலக செல்வங்களுக்காக உழைக்காமல் அழியாத மகிழ்ச்சியைத் தரும் நிலைவாழ்விற்காக உழைத்திட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 19வது ஞாயிறு (11.08.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 19வது ஞாயிறு வாரத்தில் இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த வந்திருக்கும் இறை உள்ளங்களே! இன்றைய திருவழிபாடு நாம் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு வாழவும் இறைவனுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக வாழவும் அழைப்பு விடுக்கிறது. நம்பிக்கை என்பது இறைவனை அறிந்து கொள்வது அல்ல மாறாகத் தான் உணர்வுபூர்வமாக இறைவனை தன் வாழ்வில் உணர்ந்து அனுபவிப்பது ஆகும். இன்றைய நற்செய்தி வாசகம் இரண்டு கருத்துக்களை நமக்குத் தருகின்றது. ஒன்று பகிர்வு, இரண்டு விழிப்பும் நம்பிக்கையும். நாம் கடவுள் முன்னிலையில் செல்வந்தராக இருக்கவேண்டும். அதற்காக எம்மிடம் உள்ளவற்றை ஏழைகளோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். இதற்கு எம்மிடம் அன்பு இருக்கவேண்டும். செல்வச் செருக்கினால் வாழ்வு வந்துவிடாது என்பதை உணர்ந்தவர்களாக எமது நிலைவாழ்வை நோக்கிய பயணத்தை நோக்கியவர்களாக நாம் நினையாத நேரத்தில் வரும் ஆண்டவரை வரவேற்க விழிப்போடும், நம்பிக்கையோடும், செபத்தோடும் காத்திருக்க அருள்வரம் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** சா.ஞா 18:6-9

எங்கள் பகைவர்களை நீர் தண்டித்து அந்த ஒரே செயலால் உம்மிடம் எங்களை அழைத்து பெருமைப்படுத்தினீர்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

**இரண்டாம் வாசகம் :** எபி 11:1-2,8-19

எதிர்நோக்கியிருந்த நகரைத் திட்டமிட்டவரும் கட்டியவரும் கடவுளே.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா அல்லேலூயா விழிப்பாயிருங்கள் ஆயத்தமாக இருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் :** லூக் 12:32-48

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எமது ஏக நம்பிக்கையான இயேசுவிடம் நாம் செல்லவும் இயேசுவின் வருகைக்காக நாம் தயார் நிலையில் இருக்கவும் எம்மை வழிநடத்தும் திருஅவையை வழிநடத்திச் செல்லும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவறத்தோர் திருஅவையினர் ஆகிய அனைவரும் இயேசுவின் சாட்சிகளாக என்றும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

நாட்டு மக்களுக்காக உழைக்கும் தலைவர்களும் அதிகாரிகளும் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக பழிதீர்க்கும் அரசியல் நடவடிக்கைகளை களைந்து உண்மை உள்ளவர்களாக மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் நலனுக்காகவும் உழைத்திட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நம்முடைய உழைப்பிற்கு ஏற்றாற்போல இயேசு பலன் அளிப்பார் என நம்பவும், எப்பொழுதும் எந்நிலையும் எச்சோதனையிலும் மனந்தளராது நம்பிக்கையுடன் வாழவும் இயேசுவின் வருகையை எதிர்கொண்டு அதற்காக உழைக்கவும் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 09

## சோதனைகளை எதிர்த்தல்

- சிலருக்குத் தங்கள் மனமாற்றத்தின் தொடக்கத்திலும், சிலருக்கு முடிவிலும் அதிக கடின சோதனைகள் வருகின்றன.
- ஆனால், சிலர் தங்கள் வாழ்நாள் முழுவதுமே அல்லல்படுகின்றனர்.
- மனிதரின் நிலையையும், பலன்களையும் எடைபோட்டுத் தாம் தேர்ந்தெடுத்த மனிதருடைய மீட்புக்காக அனைத்தையும் ஒழுங்கு செய்யும் தெய்வச் செயல்முறையின் ஞானத்திற்கும், நேர்மைக்கும் ஏற்ப சிலர் மிக எளிதாகச் சோதிக்கப்படுகின்றனர்.
- எனவே, நாம் சோதிக்கப்படும்போது மனம் உடைதல் கூடாது. ஆனால், எல்லாத் துன்பத்திலும் நமக்குத் துணை செய்யும்படி இறைவனை மிகுந்த பற்றுடன் மன்றாட வேண்டும்.
- அப்படியானால்தான், புனித சின்னப்பர் கூறியதுபோல "வெல்லமுடியாத சோதனைக்கு உள்ளாகும்படி உங்களை விடமாட்டார்" (1கொரி 10:13) என்பதை உணர முடியும்.
- எல்லாச் சோதனையிலும், துன்பத்திலும் நமது மனத்தை இறைவனின் கரங்களுக்குப் பணியச் செய்தல் வேண்டும். ஏனென்றால், தாழ்ந்த மனத்தோருக்கு அவர் மீட்பும் உயர்வும் அளிப்பார்.
- ஒருவன் எவ்வளவு முன்னேறியிருக்கிறான் என்பதைச் சோதனைகளும், துன்பங்களும் தெளிவுப்படுத்துகின்றன. இந்த தெளிவில்தான் மேலான பலனிருக்கிறது, பண்பும் அதிகம் துலங்குகிறது.
- துயரத்தை ஒருவன் சுவைக்காதபோது பக்தி பற்றுதல் உடையவனாக, இருப்பது பெரிதன்று. ஆனால், எதிர்ப்பு வரும்போது தன்னைப் பொறுமையில் காப்பவனே மிகுந்த வளர்ச்சிபெறும் வாய்ப்புடையவன் ஆவான்.
- சிலர் பெரிய சோதனைகளின் மீது வெற்றி கொள்கிறார்கள். ஆனால், அன்றாடச் சிறிய சோதனைகளில் அடிக்கடி தவறி விடுகிறார்கள். இவ்வளவு சிறிய சோதனைகளை வெல்ல வலிமையற்று இருப்பவர்களின் சிறுமையுற்றுப் பெரிய சோதனைகள் வரும்போது தங்களில் நம்பிக்கை இழந்து போவார்கள்.

**தொடரும்**

# இயேசுவின் அன்பு மறையுமோ



முக்கனியில் பிழிந்தெடுத்த சாற்றின்
சுவையும் குறையலாம்.
முத்தமிழில் வடித்தெடுத்த காவியத்தின்
பெருமை மறையலாம்.
தோகை விரித்தாடும் மயிலின்
அழகு குறையலாம்
சோலைக் குயிலின் காந்தக் குரலின்
இனிமை குறையலாம்.
வானவில்லின் ஏழு நிறங்களும் மங்கி
மறையலாம்.
வண்ண மலர்கள் மணமிழந்து சுருதி மடியலாம்
வளமை பொங்கும் பயிர்கள் காய்ந்து மடியலாம்
பாறைகளும் உறுதியிழந்து இடிந்து போகலாம்
பாலைவனத்தில் அமைதி கூட
கலைந்து போகலாம்,
உதிரத்தைப் பாலாக்கி பரிந்தூட்டும்
தாயின் பாசமும் மறையலாம்
உறவுகளும் நமைப்பிரிந்து தவிக்க விடலாம்
ஆண்டவரின் தோட்டத்தில்
ஆனந்தமாய் வாழ்ந்திடவே
யாவற்றையும், நமக்கீந்த
இயேசுவின்
அன்பு மறையுமோ

# குருத்துவ பணி வாழ்வில் இவ்வருட யூபிலி விழா அருட்பணியாளர்கள்

## அருட்பணி. பிரகாஷ் பர்னாந்து அடிகளார்



**தந்தை** : A.M. பர்னாந்து
**தாய்** : ஜொஸ்பின் பர்னாந்து
**பிறந்ததிகதி** : 1964.11.23
**குருமடம்** : 1987.04.01
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், களுத்துறை, அம்பிட்டிய தேசியகுருமடம்
**குருப்பட்டம்** : 1994.07.30 அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையினால் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : சுபோதி கல்வி நிலையத்தில் ஆற்றுப்படுத்தல், உளவியல், குணப்படுத்தலுக்கான பயிற்சிகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அருட்பணி. டெரல் கூஞ்ஞு அடிகளார்



**தந்தை** : ரெகுலஸ் கூஞ்ஞு
**தாய்** : பென்சியா கூஞ்ஞு
**பிறந்ததிகதி** : 1966.02.25
**குருமடம்** : 1986.01.18
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், களுத்துறை, அம்பிட்டிய தேசியகுருமடம்
**குருப்பட்டம்** : 1994.07.30, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையினால் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : சுபவத் அரணயில் 19 வருடங்களாக இயக்குனராக பணிபுரிந்து கொண்டிருக்கின்றார்.

## அருட்பணி. மெக்சிமஸ் ரொட்றிக்கோபுள்ளே அடிகளார்



**தந்தை** : ஜோன் ரொட்றிக்கோ தும்பிந்தபுள்ளே
**தாய்** : ரீட்டா ரொட்ரிக்கோ
**பிறந்ததிகதி** : 1966.06.28
**குருமடம்** : 1983.01.28
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், களுத்துறை, அம்பிட்டிய தேசியகுருமடம்
**குருப்பட்டம்** : 1994.07.30, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையினால் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : பொரள்ளை புனித அலோசியஸ் குருமடத்தின் ஆன்மீக இயக்குனராக பணிபுரிந்து கொண்டிருக்கின்றார்.

## அருட்பணி. கால்டன் த சில்வா அடிகளார்



**தந்தை** : மொறிஸ் த சில்வா
**தாய்** : கத்தரின் ஜீலியானா
**பிறந்ததிகதி** : 1967.05.01
**குருமடம்** : 1982.01.17
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், களுத்துறை, அம்பிட்டிய தேசியகுருமடம்
**குருப்பட்டம்** : 1994.07.30, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையினால் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : களுத்துறை திருச்சிலுவை கல்லூரியில் இயக்குனராக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

## அருட்பணி. பொன்சியுஸ் ரொனி பெரேரா அடிகளார்



**தந்தை** : G. கார்லோ பெரேரா
**தாய்** : எலிசபெத் கூரே
**பிறந்ததிகதி** : 1967.11.19
**குருமடம்** : 1982.01.17
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், களுத்துறை, அம்பிட்டிய தேசியகுருமடம்
**குருப்பட்டம்** : 1994.08.06, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகையினால் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : மரியாயின்சேனை இயக்குனராகவும், கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் உள்ள அசிப்பா மற்றும் நற்செய்திப்பணிக்கும் அங்கத்தவராக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

## அருட்பணி. மேரியஸ் கிறிசாந்த பர்னாந்து அடிகளார்



**தந்தை** : ஜோன் பேனாட் பர்னாந்து
**தாய்** : மெட்டில்டா அரச குலரத்ண
**பிறந்ததிகதி** : 1967.03.30
**குருமடம்** : 1982.01.27
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், களுத்துறை, அம்பிட்டிய தேசியகுருமடம்
**குருப்பட்டம்** : 1994.08.06, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகையினால் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : பமுனுவில பங்கில் பங்குத்தந்தையாக பணிபுரிந்து கொண்டிருக்கின்றார்.

## அருட்பணி. P.A.D கிங்சிலி ஜவன் அப்புஹாமி அடிகளார்



**தந்தை** : கமிலஸ் அப்புஹாமி
**தாய்** : மேரி கத்தரின்
**பிறந்ததிகதி** : 1960.11.08
**குருமடம்** : 1985.01.25
**குருத்துவக்கல்வி** : ஜோன் வியானி குருமடம்
**குருப்பட்டம்** : 1994.03.26, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையினால் மொறட்டுவை, புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : நீர்கொழும்பு பெரியதெரு புனித மரியாள் பேராலயத்தில் பங்குத்தந்தையாக பணிபுரிந்துகொண்டிருக்கின்றார்.

## அருட்பணி. சரத் திரிமான்ன அடிகளார்



**தந்தை** : லிவினஸ் திரிமான்ன
**தாய்** : லோறா பெரேரா
**குருமடம்** : 1987
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், ஜோன் மேரி வியானி குருமடம், களுத்துறை அம்பிட்டிய தேசியகுருமடம்.
**குருப்பட்டம்** : 1994.03.26, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையினால் மொறட்டுவை, புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : பேரலந்த பங்கில் பங்குத்தந்தையாக பணிபுரிந்து கொண்டிருக்கின்றார்.

## அருட்பணி. தர்ஷன ஜயமான்ன அடிகளார்



**தந்தை** : D.A ஜயமான்ன
**தாய்** : கிரேஸ் ஜயமான்ன
**பிறந்ததிகதி** : 1965.12.01
**குருமடம்** : 1985
**குருத்துவக்கல்வி** : அலோசியஸ் குருமடம், களுத்துறை, அம்பிட்டிய தேசியகுருமடம்
**குருப்பட்டம்** : 1994.03.26, அன்று ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையினால் மொறட்டுவை, புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பொழிவு செய்யப்பட்டார்.
**தற்போது** : அமெரிக்காவில் உள்ள பங்குகளில் சேவையில் ஈடுபட்டுள்ளார்.



**“தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்”**
**(எரே 1:5)**

இவ்வருடம் தமது குருத்துவ பணிவாழ்வில் 25வது வருடங்களை இறைவனுக்கு அர்ப்பணித்த அருட்தந்தையர்களை ஞானஒளி வாழ்த்துகின்றது. இவர்களின் பணி வாழ்வு தொடரவும், மீண்டும் பல வருடங்கள் சேவை புரியவும், உடல் உள, ஆன்ம நலத்துடன் வாழவும் வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றது.


பாஸ்

21ம் திகதி ஆடி மாதப
தேவாலயம் மீள அர்ச்
மெல்கம் கர்தினால் ர
தெரிவிக்கும்போது தொ
தாக்குதலின் மூலம் தமத
விசேட சக்திகளினூடாக
அடிப்படைவாத
முஸ்லிம் இளைஞர் சிலரை


படங்கள் : T சுனில் பர்ன

# த ஞாயிறு தாக்குதல்
# சிங்கள முஸ்லிம் கலவரத்தை
## உருவாக்க நடத்தப்பட்ட சதியாகும்!
– கர்தினால் தெரிவிப்பு.



ம் கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார்
சிப்பு வழிப்பாட்டின்போது அதிமேதகு
ஞ்சித் ஆண்டகை தமது கருத்தை
ர்ந்து கூறியதாவது, பாஸ்கு ஞாயிறு
நோக்கத்தை நிறைவேற்ற வெளிநாட்டு
நடத்தப்பட்ட தாக்குதலாகும்.
குழுக்களின் ஊடாக கருத்துக்களை பரப்பி
பிழையாக வழிநடத்தியிருக்கின்றார்கள்.

உலகத்தில் சில நாடுகளில் இப்படிப்பட்ட கலவரங்களை தூண்டி சக்திவாய்ந்த ஆயுதங்களை விற்பனை செய்யவும், அந்த நாடுகளில் எண்ணெய் வளத்தை கைப்பற்றவும் சர்வதேச சக்திகள் செயல்படுகின்றன. இச்சக்திகள் எவ்வளவு முயற்சித்தாலும் தகுந்த பாதுகாப்பின் மூலம் இந்த மரணங்களை தவிர்த்திருக்கலாம். அரசியல் கட்சியினது பேராசையினால் இக்கொலைகள் நடந்தேறின. ஒவ்வொரு கட்சிக் குழுக்களின், ஆணைக்குழுக்கள் உருவாக்கி தம் கட்சித்தலைவர்களுக்கு ஏற்ற விதத்தில் அறிக்கையிடுகின்றனர். இவை தேர்தலை முன்வைத்து நடத்தும் போலியாட்டமாகும். நாட்டில் 70களிலிருந்து அரசாட்சி செய்தவர்கள் கொலை, குண்டு தாக்குதல்கள், காணாமல் ஆக்கப்படல், கொலை செய்து ஆறுளில் மிதக்க விடுதல், டியரில் எரித்தல் போன்றவைகளை நடத்தினர். எந்தவொரு அரசும் சரியான நியாயமான அறிக்கையைத் தரவில்லை. என்ன நடந்தது? யாரால் நடந்நதது? என்பவைப்பற்றி யாருக்கும் தெரியாது....

15



இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுதூபியை கர்தினால் ஆசீர்வதிக்கின்றார்.




ஆலயத்தை மீள் அர்ச்சிப்பு செய்தல்.



இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மக்கள்.

ாந்து

# பிறர் நலம் பேணுவோம்...!



தக்காளி, ஐஸ்கட்டி, வெங்காயம் மூவரும் இணைபிரியா நண்பர்கள். காலார காலை உலாப் போனார்கள்.

பேசிக்கொண்டே நடந்தார்கள்; 'தங்களில் ஒருவர் செத்துப் போனால்..... மற்றவர் அழவேண்டும்" என்று

போகும் பாதையில் ஓர் ஆறு வந்தது. தக்காளியும் வெங்காயமும் குளிக்க ஆயத்தமாயின. அடம்பித்தது ஐஸ்கட்டி; 'நானும் குளிப்பேன்' பதறிப்போனது தக்காளி; 'ஐஸ்கட்டி நண்பா.... என்ன வார்த்தை சொன்னாய்...? உன் வாழ்வில் குளியல் என்பதே கிடையாது. கம்முனு கெட...! கேட்டதா ஐஸ்கட்டி...? வேண்டாம்.... வேண்டாம்...." என்று சொல்லச் சொல்ல 'தொபுக்கட்டீர்..." என ஆற்றில் குதித்தேவிட்டது.

குதித்தது குதித்ததுதான். வெளியே வரவேயில்லை.

செத்துப்போன ஐஸ் நண்பனை நினைத்து வெங்காயம், தக்காளி இரண்டும் அழுதன. அது செய்த நல்ல காரியங்களைப் பற்றிப் பேசிப் பேசி அது நடந்தேவிட்டது.

சரக்கு லாரி ஒன்று தாறுமாறாக ஓடித் தக்காளி மேல் ஏறியது. வயிறு வெடித்து சம்பவ இடத்திலேயே மாண்டுபோனது.

தனித்துவிடப்பட்ட வெங்காயம் கொஞ்ச நேரம் தக்காளிக்காக அழுதது.


அந்தப் பக்கம் வந்தார் கடவுள். முறையிட்டது வெங்காயம்; 'கடவுளே...! ஐஸ்கட்டி செத்தப்போக நானும் தக்காளியும் அழுதோம். தக்காளி செத்தப்போக நான் அழுதேன். நான் செத்தா யார் அழுவா..?"

அழுதபடி கேட்டு நின்ற வெங்காயத்திற்கு ஆறுதல் வரம் தந்தார் கடவுள்: வெங்காயமே... கலங்காதே..! உயிரோடு இருந்தபோது நீ பிறருக்காக அழுதாய். எனவே நீ செத்தால்... ஊரே அழும்...!"

## பிறருக்காக அழு! உனக்காக ஊரே அழும்...!!

# நற்செய்தியாளர்களை அறிவோம்

## புனித மாற்கு நற்செய்தி






**ஆசிரியர் : புனித மாற்கு**
அடையாளம் : சிங்கம்
எழுதப்பட்ட காலம் : கி. பி. 64-66 ஆம் ஆண்டுகளில்
இடம் : உரோம் நகர்.
வேறு பெயர் : பாடுகளின் நற்செய்தி
அதிகாரங்கள் : 16

இயேசுவை புதிய மோசேயாகவும், மெசியாவாகவும் காட்டுகின்றார் புனித மாற்கு. நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களுக்கு இந் நற்செய்தியை எழுதினார். கிறிஸ்துவின் சிலுவை வழியாகத் தான் நமக்கு மீட்பு உண்டு என்பதை மாற்கு தனது நற்செய்தியில் தருகிறார்.

# ஊதாரி மகனின் உவமை (புனித லூக் 15: 11–32)



ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள்.

அவர்களுள் இளையவர் தந்தையை நோக்கி, ............

..........................................................................

.................................................................. என்றார்.

அவர் செத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். சில நாள்களுள்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார்; அங்கு தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் அவர் செலவழித்தார்.

பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் வறுமையில் வாடினார்; எனவே அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப்

பிழைக்கச் சென்றார். ..........................................

..........................................................................

..........................................................................

அவர் பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்கு கொடுப்பார் இல்லை.

அவர் அறிவு தெளிந்தவராய், **'என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேன்!** நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், **'அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம்செய்தேன்! இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன், உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்;** என்று சொல்லிக்கொண்டார்.

உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்துக்கொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். மகனோ அவரிடம், **அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன், இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்** என்றார். தந்தை தம் பணியாளரை நோக்கி, **'முதல்–தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள், இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள், கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள், நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம்.** .....

..........................................................................

..........................................................................

.................................................

என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள்.

'அப்போது மூத்த மகன் வயலில் இருந்தார். அவர் திரும்பி வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்தபோது, ஆடல் பாடல்களைக் கேட்டு, ஊழியர்களுள் ஒருவரை வரவழைத்து, 'இதெல்லாம் என்ன?' என்று வினவினார். அதற்கு ஊழியர் அவரிடம்,'உம் தம்பி வந்திருக்கிறார். அவர் தம்மிடம் நலமாகத் திரும்பி வந்திருப்பதால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்" என்றார். அவர் சினமுற்று உள்ளே போக விருப்பமில்லாதிருந்தார். உடனே அவருடைய தந்தை வெளியே வந்து, அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டார். அதற்கு அவர் தந்தையிடம், '

..........................................................................

..........................................................................

................................ஆயினும், என் நண்பரோடு நான் மகிழ்ந்து கொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக் கூட எனக்கு நீர் தந்ததில்லை. ஆனால் விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளையெல்லாம் அழித்துவிட்ட இந்த உம் மகன் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!" என்றான். அதற்குத் தந்தை, இப்போது நாம் மகிழ்ந்து கொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில் உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான். மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற்போயிருந்தான். மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார்.




## விவிலியப் பகுதி



## மாற்கு நற்செய்தி
### 4ஆம் அதிகாரம்

65. 'அக்கரைக்குச் செல்வோம், வாருங்கள்' என்று கூறியது யார்?
66. 'போதகரே, சாகப்போகிறோமே! உமக்கு கவலையில்லையா? என்று இயேசுவிடம் கூறியது யார்?
67. இயேசு விழித்தெழுந்து யாரைக் கடிந்து கொண்டார்?
68. 'இரையாதே, அமைதியாயிரு" என்று இயேசு யாரிடம் கூறினார்?
69. காற்றும், கடலும் அடங்கியதும் என்ன உண்டாயிற்று?
70. அஞ்சும் சீடர்களைப் பார்த்து இயேசு என்னக் கேட்டார்?
71. இயேசுவின் வார்த்தைக்கு எது கீழ்ப்படிந்தது?
72. இயேசு கடலுக்கு அக்கரையிலிருந்து எந்த பகுதிக்கு வந்தார்?
73. இயேசு படகை விட்டு வெளியே வந்ததும் யார் அவருக்கு எதிரே வந்தார்?
74. தீய ஆவி பிடித்த மனிதன் இயேசுவை யார் என்று அழைத்ததான்?

15ம் பக்கம்

**இல. 02, கொழும்பு**
**கத்தோலிக்க அச்சகம்,**
**கொழும்பு 08.**
**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**

**மேலே தரப்பட்டுள்ள உவமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து இம்மாதம் ஆகஸ்ட் 19ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ–மெயிலுக்கு அனுப்புங்கள்.**

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 மாணவர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

**சரியான விடையளித்தவர்களுக்கு எமது பாராட்டுகள்**

**1. பெயர்: ஆன் பிளசினா போல்தாஸ்**

**பாடசாலை: நல்லாயன் கன்னியர் மடம், தரம் : 08**

மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்



## உன்னை நான் எவரோடும் ஒப்பிடவில்லை

நீ தனித்தன்மை உடையவனாய் இருப்பதால் உன்னை நான் மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. ரோஜா மலருக்கென்று ஒரு தனித்தன்மை உண்டு. அதுபோலவே லில்லி மலருக்கென்று ஒரு தனித்தன்மை உண்டு.

ரோஜா மலரில் காணப்படும் குணங்களை நான் லில்லி மலரில் பார்ப்பதில்லை. லில்லி மலரில் காணப்படும் குணங்களை நான் ரோஜா மலரில் பார்ப்பதில்லை.

உன் நண்பருக்கு என்று ஒரு தனித்தன்மை உண்டு. அதுபோலவே உனக்கென்று ஒரு தனித்தன்மை உண்டு. புனித சவேரியாருக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அது போலவே உனக்கென்று ஒரு தனித்தன்மை உண்டு.

உனது நண்பரைப் போல அல்லது புனித சவேரியாரைப் போல வாழ வேண்டும் என்று நான் விரும்புவதில்லை.

நீ நீயாக வாழ வேண்டும் என்றுதான் விரும்புகின்றேன். நீ தனித்தன்மை உடையவனாதலால் நீ தேவையின்றி மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்க்கும்போது "அவர்கள் என்னைவிட நல்லவர்கள் நான் ஒன்றுமில்லாதவன்" என்று உணர்கிறாய். உண்மைதான்! நீ மற்றவர்கள் போல சில செயல்களைச் செய்ய முடியாது. மற்றவர்களிடம் காணப்படும் ஒரு சில திறமைகள் உன்னிடம் இல்லாமல் இருக்கலாம். மற்றவரிடம் இருக்கும் பண்புகள் ஒரு சில இல்லாமல் இருக்கலாம்.

எனவே!

நீ அவர்களைப் பெரியவர்களாகவும், உன்னைச் சிறியவனாகவும் கணிக்கத் தேவையில்லை. ஒருவரிடம் உள்ள செயல்களை வைத்து திறமைகளை வைத்து இவர்கள் பெரியவர்கள் நல்லவர்கள் என்று நான் முடிவு எடுப்பதில்லை.

செயல்களை வைத்து ஒருவன் உயர்ந்தவன் - தாழ்ந்தவன், பெரியவன் - சிறியவன், மதிப்புக்குரியவன் - மதிப்பற்றவன் என்று நான் முடிவு செய்வதில்லை.

நீ எவரையும் விட பெரியவனும் இல்லை, நீ எவரையும் விட சிறியவனும் இல்லை.

உன்னை ஒருவரும் மற்றவருடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. நான் உனக்கென்று ஒரு சில தனித்தன்மைகளைக் கொடுத்திருக்கின்றேன் அத்திறமைகளைக் கண்டு கொண்டு அவற்றை வெளியில் கொண்டு வந்து உனக்கும் பிறருக்கும் பயன்படுத்து.

# தேர்வுக் களம்

### 2. தேர்ந்தெடுத்துத் தொடங்குவோம்

தேர்வில் வினாத்தாள் கொடுக்கப்பட்டவுடன் கேள்வியைப் பார்த்ததும் விடை எழுதத் தொடங்கி விடுவார்கள். இது நல்ல பழக்கமில்லை. வினாத்தாள் மேலோட்டமாகவாவது முழுமையாக வாசிப்பது முக்கியம். இதற்காக ஐந்து நிமிடம் ஒதுக்கிக் கொள்ளலாம். இப்போது சில தேர்வுகளில் வினாத்தாள்களையே ஐந்து, பத்து நிமிடங்கள் முன்பாகக் கொடுத்துவிடுகிறார்கள். அந்த நேரம் முடிந்த பிறகுதான் விடை எழுதத் தொடங்க வேண்டும். வினாத்தாளை முழுமையாக ஏன் வாசிக்க வேண்டும்? இதில் பல நன்மைகள் இருக்கின்றன.

முதலில் என்னென்ன கேள்விகள், வந்திருக்கின்றன என்பது மேலோட்டமாகத் தெரிந்துவிடும். நாம் படித்த, படிக்காத அல்லது பயந்து கொண்டிருந்த பல கேள்விகள் வினாத்தாளில் இருக்காது. இந்தக் கேள்வி - பதில்களை நம்முடைய மூளையின் தற்காலிக நினைவகம் நீக்கிவிட இந்தக் கேள்வி வாசிப்பு உதவும். இதில் வந்திருக்கின்ற கேள்விகள் பற்றிய சிந்தனை மட்டுமே தேர்வு நேரத்தில் இருக்கும்.


அடுத்தது, தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு நமக்கு நன்றாகத் தெரிந்த, எளிய நிறைய மதிப்பெண் கிடைக்கக் கூடிய கேள்விகளை நாம் வாசித்துத் தேர்ந்தெடுக்கலாம். அவசரப்பட்டு ஒரு கேள்விளை எடுத்து, பாதிவரை எழுதி நின்றுபோய், அதை அடித்து,.. இப்படி ஏராளமான தொல்லைகளைத் தவிர்க்கலாம். நிறைய நேரத்தைப் பின்னால் மிச்சப்படுத்தலாம்.

மூன்றாவது, நாம் விடை எழுதும் வரிசையைத் தீர்மானிக்கலாம். நமக்கு சுலபமாகத் தோன்றும் கேள்விகளை எழுதத் தொடங்கலாம். சில கடினமான அல்லது யோசித்து எழுத வேண்டிய கேள்விகளைப் பின்னால் தள்ளி வைத்து எழுதலாம்.

நான்காவது, பொதுவாகக் கேள்விகளுக்குத் தேவைப்படும் நேர அளவை மதிப்பீடு செய்து-கொள்ளலாம். பெரிய நீளமாக கேள்விகள் இருந்தால் நம்முடைய விடை எழுதும் வேகத்தைக் கூட்டியாக வேண்டும். அப்படி இல்லாவிட்டால் கொஞ்சம் நிதானமாக, துல்லியமாக அழகாக விடை எழுதலாம்.

எனவே கேள்விகளை வாசித்துத் தேர்ந்தெடுத்த பிறகே எப்போதும் எழுதத் தொடங்குவோம். அதுதான் நல்ல பழக்கம்.

**தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு நமக்கு நன்றாகத் தெரிந்த, எளிய நிறைய மதிப்பெண் கிடைக்கக் கூடிய கேள்விகளை நாம் வாசித்துத் தேர்ந்தெடுக்கலாம்.**



### 3. சரியாக, தெளிவாக, அழகாக

இரண்டு மாணவர்கள் ஒரே விடையை எழுதி இருப்பார்கள். ஒருவருக்கு 90, மற்றொருவருக்கு 70 கிடைத்திருக்கும். இது நடக்குமா என்று கேட்கா-தீர்கள். நமக்கே தெரியும். வகுப்புகளில் மாணவர்கள் அடிக்கடி எழுப்பும் கேள்விதான் இது.

நம்முடைய விடைத்தாள்களைக் கணிப்-பொறிகள் திருத்துவதில்லை. ஆசிரியர்கள் திருத்துகிறார்கள். பொதுத் தேர்வின் போது விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களின் நிலையைக் கொஞ்சம் நினைத்துப் பார்ப்போம். வீட்டை விட்டு, பள்ளியை விட்டு புதிய சூழலில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான விடைத்தாள்களைத் திருத்தும்போது...

இந்தச் சூழலில்தான் ஆசிரியர் நமது விடைத்தாளைக் கையில் எடுக்கிறார். அவருக்கு வசதியாக, எளிதில் மதிப்பிடும் வகையில் நாம் விடைகளைக் கொடுத்தால்... நிச்சயம் நமக்குக் கூடுதலான மதிப்பெண் கிடைக்கும். இதில் என்ன சந்தேகம்? எனவே, நாம் சரியான விடையைத் தெளிவாகத் தரவேண்டும். முடிந்தவரை அழகாகவும் தரவேண்டும். பல சின்னச் சின்ன உத்திகளைச் சுட்டிக்காட்டலாம். சில எடுத்துக்காட்டுகளை மட்டும் இங்கே பார்ப்போம்.

### விடைகளை முடிந்தவரை தெளிவாக எழுதுங்கள்!

- நிறைய வளவளவென்று எழுதுவதைத் தவிர்ப்போம். துல்லியமான விடைகள் தான் முக்கியம்.
- முக்கியமான செய்திகளை எண் வரிசையில் தரலாம். அடிக்கோடிட்டும் காட்டலாம்.
- நெடிய கட்டுரையானால் பல சிறு சிறு பந்திகளாகத் தரலாம். சிறு தலைப்புகள் தருவது நல்லது.
- அலகுகள் பன்பாடுகள், சூத்திரங்கள் போன்றவற்றைத் தெளிவாகத் தரவேண்டும்.
- பெரிய எழுத்துக்களாக இருக்கட்டும், வரிக்கு வரி, தேவையான அளவு இடைவெளி இருக்கட்டும்.
- கேள்வி எண்ணைத் தெளிவாகக் கொடுங்கள். ஒரு கேள்விக்கும் அடுத்த கேள்விக்கும் இடையில் கோடிடுங்கள்.
- ஒன்றை நினைவில் கொள்ளுங்கள் தலைவிதி என்று எதுவுமில்லை. நம்முடைய வாழ்க்கையைத் தீர்மானிப்பது நம் தலையெழுத்து அல்ல. பல நேரங்களில் நம் கை எழுத்து நம் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது

சரியாக, தெளிவான, அழகாக நம் திறமைகளை வெளிப்படுத்தப் பழகுவோம். நமது தேர்வுகள் மூலம் இந்தப் பழக்கம் தொடங்கட்டும்.

தொடரும்

# துன்புறும் கிறிஸ்தவர்களுக்காக லூர்து நகரில் சிறப்புத் திருப்பலி



உலகெங்கும், தங்கள் மத நம்பிக்கைக்காக துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்காக நாம் சிறப்பாக செபிக்கவேண்டும் என்று, இங்கிலாந்து கர்தினால் வின்சென்ட் நிக்கோல்ஸ் அவர்கள், லூர்து நகர் மரியன்னை திருத்தலத்தில் ஆற்றிய ஒரு சிறப்புத் திருப்பலியில் அழைப்பு விடுத்தார்.

ஆடி 24, புதனன்று, லூர்து நகர் அன்னை மரியா திருத்தலத்தின், புனித பத்தாம் பயஸ் பசிலிக்காவில் கூடியிருந்த பன்னாட்டு திருப்பயணிகளுக்கு சிறப்புத் திருப்பலியாற்றிய வெஸ்ட்மின்ஸ்டர் பேராயர், கர்தி-னால் நிக்கோல்ஸ் அவர்கள், முன்னெப்போதும் இல்லாத அளவு கிறிஸ்தவர்கள் இன்று தங்கள் மத நம்பிக்கைக்காக பெரும் துன்பங்களையும், உயிரி-ழப்புக்களையும் சந்தித்து வருகின்றனர் என்று தன் மறையுரையில் கூறினார்.

மரியன்னையின் மீது கொண்டிருக்கும் பக்தியை வெளிப்படுத்தும் ஒரே நோக்கத்துடன், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து நாம் இங்கு ஒரே குடும்பமாகக் கூடியுள்ளோம் என்று, தன் மறையுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கர்தினால் நிக்கோல்ஸ் அவர்கள், ஆப்ரிக்கா, ஆசியா, இந்தியா, ஐரோப்பா மற்றும் அமேரிக்கா ஆகிய கண்டங்களிலும், நாடுகளிலும் கிறிஸ்தவர்கள் அதிக துன்பங்களுக்கு உள்ளாகின்றனர் என்று குறிப்பிட்டார்.

துன்புறும் சகோதரர், சகோதரிகளுடன் நாம் நேரடியாக தொடர்பு கொள்ள இயலாவிடினும், நம் செபங்கள் வழியே அவர்களுக்கு பெரும் ஆதரவாக நாம் இருக்கமுடியும் என்றும், தங்கள் மத நம்பிக்-கையைக் காப்பதற்கு அவர்கள் காட்டும் துணிவு நமக்கு பாடமாக அமையவேண்டும் என்றும் கர்தினால் நிக்கோல்ஸ் அவர்கள் எடுத்துரைத்தார்.

ஆடி 24ம் திகதி நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில், இங்கிலாந்தின் லிவர்பூல் உயர் மறைமாவட்டத்திலிருந்து 1,500க்கும் அதிகமானோரும், வெஸ்ட்மின்ஸ்டர் உயர் மறைமாவட்டத்திலிருந்து 700க்கும் அதிகமானோரும், மற்றும் 12 நாடுகளைச் சேர்ந்த திருப்பயணிகளும் கலந்துகொண்டனர் என்று ICN கத்தோலிக்கச் செய்தி கூறுகிறது. (ICN)

# வத்திக்கான் செய்தித் துறையின் உதவி இயக்குனர் நியமனம்



வத்திக்கான் செய்தித் துறையின் உதவி இயக்குனராக முனைவர் Cristiane Murray என்ற பெண்மணியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆடி 25, வியாழனன்று நியமித்துள்ளார். Cristiane Murray அவர்கள், 1962ம் ஆண்டு, பிரேசில் நாட்டின் ரியோ தெ ஜனெய்ரோவில் பிறந்து, அந்நகரில் உள்ள கத்தோலிக்க பாப்பிறை பல்கலைக் கழகத்தில் வர்த்தக மேலாண்மைத் துறையில் பட்டம் பெற்றார்.

1995ம் ஆண்டு வத்திக்கான் வானொலியில் தன் பணிகளைத் தொடக்கிய Murray அவர்கள், போர்த்துகீசியம், இத்தாலியம், இஸ்பானியம், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளை அறிந்தவர்.

ஆடி 18, வியாழனன்று வத்திக்கான் செய்தித்துறையின் இயக்குனராக, முனைவர் மத்தேயோ ப்ரூனி அவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நியமித்துள்-ளதையடுத்து, இந்த வாரம் வியாழனன்று, இந்நியமனம் இடம்பெற்றுள்ளது.

# புனித பெனடிக்ட் பதக்கம் பெற்ற அருள் சகோதரி பெர்க்மான்ஸ்



பாகிஸ்தானில், மதங்களிடையே நல்லுறவை வளர்க்கும் பணியிலும், கல்விப்பணியிலும் ஏறத்தாழ 70 ஆண்டுகளாகப் பணியாற்றிய அருள் சகோதரி பெர்க்மான்ஸ் அவர்களுக்கு, புனித பெனடிக்ட் பதக்கம் என்ற உயரிய விருது அண்மையில் வழங்கப்பட்டது.

இலண்டன் நகரின் வெஸ்ட்மின்ஸ்டர் பேரால-யத்தில் நடைபெற்ற இந்த விருது வழங்கும் விழாவை, வெஸ்ட்மின்ஸ்டர் பேராயர், கர்தினால் வின்சென்ட் நிக்கோல்ஸ் அவர்கள், தலைமையேற்று நடத்தி, இவ்விருதை வழங்கினார்.

அனைவரையும் ஒருங்கிணைக்கும் கல்விப்ப-ணியில், அர்ப்பண உணர்வுடன் தன்னையே வழங்கிய அருள் சகோதரி பெர்க்மான்ஸ் அவர்கள், இன்றைய இளம் தலைமுறையினருக்கு தலைசிறந்த எடுத்துக்-காட்டாகத் திகழ்கிறார் என்று, கர்தினால் நிக்கோல்ஸ் அவர்கள் கூறினார். 1930ம் ஆண்டு அயர்லாந்தில் பிறந்த பெர்க்மான்ஸ் அவர்கள், தன் 21வது வயதில், இயேசு மரியா துறவு சபையில் இணைந்து, 1953ம் ஆண்டு, தன் 23வது வயதில் பாகிஸ்தானில் பணியாற்றச் சென்றார்.

அருள்சகோதரி பெர்க்மான்ஸ் அவர்களின் மாணவராக இருந்தவர்களில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர், காலம் சென்ற பெனசீர் பூட்டோ அவர்களும், விண்வெளி ஆய்வில், 2017ம் ஆண்டு நொபேல் விருது பெற்ற இயற்பியல் குழுவின் உறுப்பினர், நெர்கிஸ் மவல்வாலா அவர்களும் அடங்குவர். 2012ம் ஆண்டு, அருள்சகோதரி பெர்க்மான்ஸ் அவர்கள் கராச்சியில் பணியாற்றிய வேளையில், பாகிஸ்தான் குடிமக்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றான, Sitara-i-Quaid-i-Azam விருது அவருக்கு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வேளையில் பாகிஸ்தான் அரசுத்தலைவர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியில், கடந்த 59 ஆண்டுகளாக கடமை தவறாமல் உழை-த்த அருள் சகோதரி பெர்க்மான்ஸ் அவர்கள், நாம் அனைவரும் பின்பற்றக்கூடிய ஒரு வாழும் எடுத்துக்-காட்டாக விளங்குகிறார் என்று கூறியிருந்தார்.







"இன்று, பல நாடுகளில் தாத்தா, பாட்டிகளின் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அவர்கள், குடும்ப வாழ்வில், மனித சமுதாயத்தின் மரபுகளையும், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் இன்றியமையாததாகிய விசுவாசத்தையும் அறிவிப்பதில் எவ்வளவு முக்கியமானவர்கள்"

"ஆண்டவரே, நீரே என் வாழ்வு என்று ஒவ்வொருநாளும் அவரிடம் சொல்லும் சாட்சிகளை இயேசு தேடிக்கொண்டிருக்கிறார்"

"வாழ்ந்துகொண்டிருக்கும்இயேசுவுடன்இடம்பெறும்சந்திப்பிலிருந்து பிறப்பது சாட்சிய வாழ்வு. நம்பிக்கையின் திருத்தூதராம் புனித மரிய மதலேனாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"


"தியானத்தையும் செயலையும் எவ்விதம் ஒன்றிணைப்பது என்பதை தெரிந்துகொள்வது, இதயத்தின் ஞானத்தில் உள்ளது என்பதை இந்நாளின் நற்செய்தி வாசகம் நினைவூட்டுகிறது. புனித மார்த்தாவின் கரங்களாலும், புனித மரியாவின் இதயத்தாலும், இறைவனையும் நம் சகோதர சகோதரிகளையும் அன்புகூரவும், அவர்களுக்கு பணிபுரியவும் தேவைப்படும் அருளுக்காக இறைஞ்-சுவோம்"

# இரத்தினபுரி மறைமாவட்டம் புனித அன்னம்மாள் ஆலய திறப்பு விழாவும், வருடாந்த திருநாளும்.









இலங்கையின் ஏனைய மறைமாவட்டங்களில் இருந்து நிதி சேகரித்து தேவாலயங்களை விரிவுபடுத்திய இரத்தினபுரி மறைமாவட்ட அருட்பணியாளர்!

இரத்தினபுரி மறைமாவட்டத்திற்குரிய தெஹி-விட்ட பங்குக்கு உரிய ருவன்வெல்ல புனித அன்னம்-மாள், புனித. நிமலமரி ஆலயம், புனித. வியாகுலமாத ஆலயம் ஆகிய ஆலயங்கள் மூன்றும் ஒன்றாக இணைத்து ருவன்வெல்ல புதிய பங்காக ஒன்றாக்கியது. 2016ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் அதன் ஆரம்ப பங்குதந்தையான கிளிபர்ட் ஷேர்வின் அடிகளாராவார். பங்கின் பிரதான ஆலயமான ருவன்வெல்ல புனித அன்னம்மாள் ஆலய மக்கள் 20 பேர்கள்கூட அமர முடியாதளவு மிகவும் சிறிய தேவாலயமாக இருந்தது. இத்தேவாலயங்கள் பங்குதந்தைக்கு சவாலாக தோன்-றியது. பங்கு மக்கள் 170 குடும்பங்களிடம் இருந்து நிதி சேகரித்து இத்தேவாலயத்தை விஸ்தரிப்பது என்பது முடியாத காரியம் என்பதை உணர்ந்தார். அதனால் அவர் இலங்கையின் ஏனைய மறைமாவட்டங்களுக்குச் சென்று நிதிசேகரிக்கும் திட்டம் வகுத்து, தமது பங்கு திருப்பலியை அயல் பங்குத்தந்தையிடம் ஒப்படைத்துவிட்டு நிதிசேகரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார். ஒவ்வொரு மறைமாவட்டமாகச் சென்று அங்குள்ள பங்குதந்தையுடன் கலந்துரையாடி அந்தப் பங்குகளில் திருப்பலி ஒப்புக்கொடுத்து இரத்தினபுரி ருவன்வெல்ல ஆலய நிலவரம் பற்றி தெளிவுபடுத்தி மக்களின் மனமுவந்த காணிக்கைகளை பெற்றார். அதிகமான கத்தோலிக்க மக்கள் தமது ஒத்துழைப்பை தாராள மனதுடன் வழங்கினர். இத்தேவாலயம் விஸ்தரிக்கப்பட்டு ஆடி மாதம் 28ம் திகதி ஞாயிறு இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு கிறிடஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகையினால் வழிபாடு நடத்தப்பட்டது. ருவன்வெல்ல பங்குதந்தை கிளிபர்ட் ஷேர்வின் அடிகள் பங்கு ஆலய கட்டுமானப் பணிக்காக எடுத்த முயற்சிகளை இவ்வாறு எடுத்துரைத்தார். 'நான் இரத்தினபுரி மறைமாவட்டத்தைச் சேர்ந்த குரு அல்ல. நான் ஜா எல யைச் சேர்ந்தவன். நான் கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு பணிபுரியவே குருமடத்திற்குச் சென்றேன். அன்று இரத்தினபுரியில் ஆயர் பணியை மேற்கொண்ட தற்போது கொழும்பு உயர் மறைமாவட்ட அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை என்னை குருவாக திருநிலைப்படுத்தினார். பின்பு இரத்தினபுரி மறைமாவட்டத்தில் பணி புரியும் அழைப்பு கிடைத்தது. இறை சேவையை கொழும்பில் செய்தாலும் இரத்தினபுரி மறைமாவட்டத்தில் செய்தாலும் அது இறைவனுக்கே உரியது என்பதை உணர்ந்து ஆவலுடன் பணியை ஏற்றுக்கொண்டேன். என்னை ருவன்வெல்ல பங்குத்தந்தையாக நியமித்தபோது இரத்தினபுரி ஆயர் கிளீடஸ் சந்திரசிறி ஆண்டகை பாரிய சவால் நிறைந்த பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். நான் இப்பங்-கிற்கு வந்து தங்கியது களிமண் பூசிய ஆலயத்தின் ஒரு பகுதியிலாகும். இந்நிலை என்னை இறை வழிநடத்-தலுக்கு உட்படுத்தியது. இத்தேவாலயத்தை மீள் நிர்மாணம் செய்யவேண்டும் என எனக்குள் தோன்றும் போது எனது கையில் ஒரு சதம் கூட இல்லை. ஆயினும் இலங்கை முழுவதும் சென்று அனைத்து மறைமா-வட்டங்களிலும் உள்ள பங்குகளில் நிதிசேகரித்து புணர்நிர்மாணம் செய்ய உறுதிபூண்டேன். எனது பங்கு பணியை அயல் பங்குதந்தையிடம் ஒப்படைத்துவிட்டு நான் மற்றைய மறைமாவட்ட பங்குகளை நாடி சென்று அங்கு திருப்பலி ஒப்புக்கொடுத்து இரத்தினபுரி பங்கின் நிலைமையை விவரித்துக் கூறி கத்தோலிக்க மக்களின் காணிக்கைகளை கேட்டு, நிதி சேகரித்தேன். சகல கத்தோலிக்க மக்களும் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியதன் மூலம் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயமாக கூறலாம்....

தொடர்ச்சி 15ம் பக்கம்

# கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் இறையியலகத்தின் வளர்ச்சிப் படிகள்...

திருமதி. நிசா ஜென்சி லோரன்ஸ் (புனித ஜோசப்வாஸ் இறையியலகம்)

இறையியல் (Theology) என்னும் சொல் இறைவன் தொடர்பான ஆய்வு எனும் பொருள் கொண்டது. அதனை விடவும், விரிவான பொருளில் சமய நம்பிக்கை, சமய ஒழுக்கம், ஆன்மீகம் சார்ந்த ஆய்வு எனவும் விளக்கலாம். அந்த வகையில் கிறிஸ்தவ இறையியல் என்பது கடவுள் தம்மை இயேசு கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தியுள்ளார் எனும் உண்மையை மையப் பொருளாகக் கொண்டு, அதன் உட்கிடக்கையை அறிவியல் முறைப்படி ஆய்ந்து விளக்குதல் ஆகும். கடவுளின் வெளிப்பாட்டை மக்கள் தங்கள் வாழ்வில் அனுபவித்து, அறிந்து, உணர்ந்து, ஏற்று அதனடிப்படையில் கிறிஸ்துவின் சீடர்களாக வாழ்ந்திட துணைபுரியும். இறையியலை ஓர் கற்கை நெறியாக பயின்றிட புனித ஜோசப்வாஸ் தமிழ் இறையியலகம் திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களையும் அன்போடு அழைக்கின்றது.

இன்று பலரையும் இறையியல் சார்ந்த பூரண அறிவோடும், வாழ்வோடும் நான்கு ஆண்டு கால கற்கை நெறியின் ஆரம்ப கற்கை நெறி நிறைவாக கலைமானி பட்டத்தோடு வெளியேற்றுகின்ற புனித ஜோசப்வாஸ் இறையியலகம் தமிழ் பிரிவிற்காக தனது ஆரம்பத்தை பல நல் உள்ளங்களின் உதவியோடு ஆரம்பித்து தொடர்ந்தும் வெற்றிகரமாக தம் பயணத்தை மேற்கொள்வது பாராட்டத்தக்கது.

கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் தமிழ் மொழி மூலமான இறையியல் வகுப்புக்களை நடாத்த வேண்டுமென்ற ஆலோசனைக்கிணங்க அருட்பணி. ஒகஸ்டின் பர்னாந்து அடிகளார் தமிழ் அப்போஸ்தலிக்க பேராயரின் பதிலாளராக பணியாற்றிய காலத்தில் அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையால் தமிழ் மொழி மூலமான இறையியல் கல்வியகத்தை உயர்மறைமாவட்ட பிரதான பொதுநிலையினர் இறையியல் கல்வியகமாக புனித ஜோசப்வாஸ் கல்வியகத்தின் கிளையாக செயற்பட அனுமதியளிக்கப்பட்டதோடு அக்குவைனஸ் கல்லூரியில் பாடநெறிகளை தொடரவும் வழிசமைத்தார்.

இக்கற்கை நெறிக்கு பொறுப்பாக 2006ம் ஆண்டு அருட்பணி. அன்டன் ரஞ்சித் அடிகளார் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார். புனித ஜோசப்வாஸ் இறையியல் கல்வியகம் உரோமையில் உள்ள உர்பானியா பல்கலைக்கழகத்துடன் இணைந்தே இப்பாடநெறிகளை வழங்குகின்றது. இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பிரிவிற்கான இறையியல் கற்கை நெறிக்காக முதலாவது குழு 2006ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் தமிழ்மொழி மூலமாக கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு இப்பாடநெறி மூன்று வருடங்களுக்கு ஒருமுறை ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் இறையியல் கற்கை மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாக அதிக எண்ணிக்கையானோர் தம் கல்வித் தகைமைகளை பெற்றுக் கொள்வதற்காக மட்டுமன்றி தம் ஆன்மீக தாகத்தை தீர்க்கவும், இறையியல் அறிவை பெற்றிடவும் சரியான இறையியலை கொண்டு சமய போராட்டங்களை எதிர்கொள்ளவும், கிறிஸ்துவின் நற்செய்தியை பறைசாற்றி வாழப்படவும் கூடிய அவா கொண்டு இந்த இறையியல் கற்கையை பயில முன்வந்தமையால் இரண்டாவது குழுவிற்கு பின்பு ஒவ்வொரு வருட தொடக்கத்திலும் புதிய குழுக்கள் உள்வாங்க்கப்பட்டனர்.

அருட்பணி. அன்டன் ரஞ்சித் அடிகளாரைத் தொடர்ந்து 2010ஆம் ஆண்டு அருட்பணி. A. ரெஜினோல்ட் லூசியன் அ.ம.தி அடிகளார் இறையியல் கற்கை நெறியின் தமிழ் பிரிவிற்கு பொறுப்பாளராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார். இன்று வரை தொடர்ந்தும்



அவரது வழிநடத்திலின் கீழ் இக்கற்கை நெறி தொடர்வது குறிப்பிடத்தக்கது. இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டு கால நிறைவின் போது டிப்ளோமா சான்றிதழ்களும், நான்கு ஆண்டு கால நிறைவின்போது கலைமானி பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இறுதி பரீட்சைகள் மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவங்கள் புனித ஜோசப்வாஸ் இறையியல் கல்வியக மண்டபத்தில் இடம்பெறுவது வழக்கம்.

உரோமை உர்பானியா பல்கலைக்கழக அனுசரனையுடன் பாடநெறிகள் ஒழுங்கமைக்கப்பட்டு நான்கு வருடங்களுக்கும் பாடநெறிகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாடங்களும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், விரிவுரையாளர்களால் திறம்பட கற்பிக்கப்படுகின்றன. இவ்வாறு பலரினதும் பாரிய முயற்சியினால் உருவாக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்ற இறையியல் கற்கை நெறியை தொடர்ந்து நடாத்துகின்ற கொழும்பு உயர்மறைமாவட்டத்திற்கு எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம். இப்பாடநெறியினை அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுநிலையினர் என அனைவராலும் பயிலக்கூடிய வாய்ப்பினை வழங்குகின்றது. இக்கற்கை நெறியின்போது மூன்று ஆண்டு கால டிப்ளோமா இறுதிப்பரீட்சையின் பின் பட்டப்படிப்பினை தொடர வேண்டுமாயின் க.பொ.த சாதாரண பரீட்சையில் அல்லது மறைமாவட்ட மறையாசிரியர்கள் பரீட்சையில் மூன்று பரீட்சைகளிலும் சித்தியடைந்திருப்பதோடு க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று சித்திகளைப் பெற்று வெளிவாரி பட்டதாரியாக பயிலுவதற்காக தகைமையை கொண்டிருக்க வேண்டும் அல்லது வேறு



அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டப்படிப்பு பத்திரம் இருக்க வேண்டியது அவசியமாகும்.

பொதுநிலையினரை அவர்களது அழைப்பிற்கும் பணிக்கும் ஏற்றவாறு ஆன்மீகம், இறையியல் கோட்பாடு விவிலியம், திருச்சபை பாரம்பரியம் மற்றும் மறையை பரப்பக்கூடிய அணுகுமுறைகள் மறைக்கல்வி போன்றவற்றை பயிற்றுவித்து அவற்றை வாழ்வாக்குவதே இறையியல் கல்வியகத்தின் நோக்கமாகும்.

இருப்பினும் கற்கை நெறியினை தொடரும் நான்கு ஆண்டுகளிலும் வெறுமனே படிப்பிற்கு மாத்திரம் எம் கவனத்தை குவிப்பதில்லை. மாறாக கல்வி, ஆன்மீகக் கலை, கலாச்சாரம் என அனைத்திலும் தம் ஈடுபாட்டை வெளிக்கொணரும் விதமாக இறையில் கற்கை நெறி அமையப்பெற்றுள்ளது. அதன் விளைவாக ஒவ்வொரு குழுவிற்குமான மாணவத் தலைவர்கள் நியமிக்கப்படுவதோடு வகுப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள், பணிகள் பகிரப்பட்டுள்ளன. முக்கியமாக தமிழ் பிரிவிற்கான “இறையியல் மாணவர் ஒன்றியம்” என்ற குழுவால் கல்வி சார்பற்ற பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்தும் இறையியலின் ஊடாக இறைபணியாற்ற பல வாய்ப்புக்களை வழங்குவது பெருமைக்குரியதொன்றாகும். அந்த வகையில் தவக்காலங்களில் குறிப்பிட்ட இடங்களை தெரிந்து திருயாத்திரைகளையும், வழிபாடுகளையும் ஒழுங்குசெய்தல், வருட இறுதியில் ஒளிவிழாக்களை கலை நயம் மிக்கதாகவும், கலாச்சார கொண்டாட்டங்களாகவும், நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் திருப்பலிகளை ஆயத்தப்படுத்தி அனைவரையும் பங்கேற்கச் செய்தல் போன்ற இன்னும் பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றிற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள அருட்பணி A. ரெஜினோல்ட் லூசியன் அ.ம.தி அடிகளாரின் முன்னிலையில் இறையியல் மாணவர் ஒன்றியத்திற்கான ஒன்றுகூடல்கள் இடம்பெற்று, அவரது வழிநடத்தலின் கீழ் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற இன்னும் பல புதிய திட்டங்களையும் செயற்படுத்த நாம் தயாராக இருக்கும் நிலையில் தற்போது சில பணிகள் எம் இறையியல் மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள்



இறையியல் தொடர்பான பயனுள்ள கட்டுரைகளை ஞான ஒளி பத்திரிகையினூடாக வெளியிடுதல் மற்றும் இறையியல் கற்கை மீதான ஆர்வம் உடையோருக்கு குறுங்கால கற்கை நெறியாக குறுகிய காலத்திற்குள் ஒரு வருடத்தில் பல கட்டங்களாக இறையியல் தலைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றது. இக்கற்கை நெறியின் இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. பலரும் இலகுவான முறையில் இறையியலை பெற்று அனுபவித்து வாழ அனைவரினதும் வசதிக்கமைய ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக கத்தோலிக்க திருச்சபைக்காக திருச்சபையினுள் ஆழ்ந்த விசுவாசத்தோடும், பற்றுறுதியோடும் கற்க வேண்டிய இயலாக இறையியல் காணப்படுகின்றது. இது அறிவிற்கு மட்டுமல்லாது எம் ஆன்மாவிற்குமான கற்கை நெறியாக இருப்பதால் நாம் கற்றுக் கொண்டவற்றை வாழ்வாக்கி எம்முள் இருக்கும் கிறிஸ்துவை வெளிக்காட்டி, இறையியலினூடாக இறைவனை ஆழமாக அறிந்து இறைபணி தொடர கத்தோலிக்க திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களும் பயன்பெற்று சிறந்து விளங்க கத்தோலிக்க திருச்சபை சார்பாக அன்போடு அழைக்கின்றோம்.

திருச்சபையின் உறுப்பினர் அனைவருக்கும் அதிக பண, நேர விரயமற்ற பெறுமதிமிக்க தூய அறிவை வளர்க்கும் கற்கை நெறியை ஒழுங்கு செய்த கொழும்பு உயர்மறைமாவட்ட இறையியலகத்திற்கும் எமக்கும் பொறுப்பாளராக இருந்து வழிநடாத்தும் அருட்பணி. A. ரெஜினோல்ட் லூசியன் அ.ம.தி அடிகளாருக்கும், எம் மதிப்பிற்குரிய விரிவுரையாளர்கள் அனைவருக்கும் அனைத்து இறையியல் மாணவர்கள் சார்பாக உள்ளம் நிறை நன்றிகளை தெரிவிக்கின்றேன். பல இறையியல் மாணவர்களை உருவாக்கி வளப்படுத்தும் புனித ஜோசப்வாஸ் இறையியலகத்திற்கு எம் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

## பேருவகைப்பாடல்

**பழைய மாணவர்களின் பேருவகைப்பாடல்:**

இணையத்தில்
இணைந்தோம்,
அன்பினால்
நிறைந்தோம்,
கவலைகள்
மறந்தோம்,
மீண்டும் குழந்தை-
களானோம்.
சோகம் மறந்து,
சிரித்து மகிழ்ந்தோம்.

வட்ஸ் அப் -
வைபரில், வாழ்த்தி
மகிழ்கிறோம்,
முக நூலில் - முகம்
பார்த்து - முகவரி -
தெரிந்தோம்,
மின்னஞ்சலில்,
மின்னலாய் செய்தி
பகிர்ந்தோம்.

குறுகிய நேரத்தில்,
குறுஞ்செய்தியில்,
குறும்பு செய்யும்,
குழந்தைகளாக,
கவலை மறந்து,
இணைந்து
மகிழ்ந்தோம்,

புதிதாய்ப்பிறந்த,
பாலகர்களாய்,
பாசத்தைப்பகிர்ந்தோம்,
சகோதர நேசத்தில்,
சங்கமித்தோம்.

தொழில் நுட்பத்தின்,
துரித வளர்ச்சியில்,
தூர தேசத்தில்,
தவறிப்போன,
தொடர்புகளை,
மறந்து போன,
நினைவுகளை,
மீட்டிப்பார்த்தோம்,
மீண்டும் பெற்றோம்.

கள்ளமில்லாத -
களங்கமில்லாத,
நல்மனத்தோடு,
நட்பிற்கு, “முகவரி”,
நாமே என்போம்,
அதை நாற்திசை
எங்கும் முழங்குவோம்,
அதுவே - எமது
“பலம்” என்பதை -
முழு உலகிற்கும்,
முழக்கமிடுவோம்.

**ஆக்கம்:**
**பென்ஜமின்**
**சோமநாதர்**

# கயித்தானின் ஏர்ப்பும் அழைப்பும்

| | |
|---|---|
| 1480.10.01 | - பிறப்பு |
| 1465 | - இறப்பு (மாமனார்) |
| சிறுவயதில் | - இறப்பு (தந்தை) |
| 1506.07.17 | - பட்டதாரி (பதுவை பல்கலைக்கழகம்) |
| 1516.09.28 | - திருத்தொண்டர் |
| 1516.09.30 | - குருப்பட்டம் |
| 1517.12.25 | - பாலகன் கையில் வந்தது |
| 1520. 09 | - தாய் இறப்பு |
| 1522 | - வைத்தியசாலை (நாப்பொலி) |
| 1524.09.14 | - Regular Clerics (சபை ஆரம்பம்) |

| | |
|---|---|
| 1980 | - 500 ஆவது ஆண்டு நினைவு |
| 1629.04.12 | - புனித பட்டம் (திருத்தந்தை கிளமண்ட் X) |
| 154708.07 | - இறப்பு (நாப்பொலி) |

தாரக மந்திரம்-

**தேடு கடவுளுடைய இறையாட்சியை**

| | |
|---|---|
| புனித பல் | - புனித (பொருள்) பண்டம் |
| வேண்டுதல் | - வேலையற்றோருக்கு, எழுத்தாளர்கள், மகப்பேறு |
| மன்றாட்டு | - தேவ பராமரிப்பு |



**ஆக்கம் : அருட்பணி. அகஸ்ரின் பர்னாந்துபுள்ளே**

இவ்வுலகில் மனிதனாக எம்மைப் படைத்த இறைவன் நாம் ஒவ்வொருவரும் புனிதர்களாக வேண்டும் என்று விரும்புகின்றார். அந்தப் புனிதத்துவ நிலையை அடைய நமக்குத் தேவையான எல்லா வழிமுறைகளையும், இறைவன் நம் மத்தியில் தந்திருக்கிறார். அவற்றில் ஒன்றுதான் எமக்கு முன்னால் வாழ்ந்து இன்று புனிதர்களாக இருப்பவர்கள். இந்த புனிதர்கள் வரிசையில் 15ஆம் நூற்றாண்டில் குருவாக சீர்திருத்தவாதியாக புனிதராக வாழ்ந்த புனித கயித்தான் தியேனே என்ற புலவர் ஆவார்.

இவரிடம் வாழ்வும் ஈர்ப்பும் பற்றி அறிந்து கொள்வோம்.

**புனித கயித்தான் முனியோரின் பணியின் சுருக்கம்:**

ஞானஸ்தானத்தின் பொழுது கொடுக்கப்பட்ட பெயர் Geetano di santo maria) கயிதானே டீ சாந்தா மரியா அருகில் இருந்த கோயிலில் சாந்தாகொடுருன தான இவருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. இந்த கோயில் டொமினிக்கன் (Dominicans) துறவியால் நடத்தப்பட்டு வந்தது. புனிதர் சிறுவயதிலேயே ஜெபத்திலும் நற்கருணை ஆராதனைக்கும் முதலிடம் கொடுப்பதிலும் ஏழைகளுக்கு உதவுவதிலும் (நோயுற்றோருக்கு) மிக ஈடுபாடு உற்றவராக இருந்தார். தனது இருபதாவது வயதில் மேற்படிப்பை பெற்றுகொள்வதற்காக தனது சகோதரன் Battista வுடன் பாதுவாநகர் பல்கலைக்கழகம் அனுமதி பெற்றார், அப்பல்கலைக்கழகத்தில் அரசியல் இராணுவ கற்கை நெறி திருச்சபைச் சட்டம் போன்ற துறைகளில் விசேட தேர்ச்சி பெற்று படிப்பை நிறைவு செய்தார். புனிதரின் பாட்டனாரும் இங்கு கடமையாற்றியதால் அவருக்கு அதீத செல்வாக்கும் கற்கும் திறனும் இருந்தமையால் பரீட்சைகள் அனைத்திலும் சித்தி பெற்றதோடு மெய்யியல் இறையியல் கற்கை நெறியினை ஆர்வத்தோடு கற்று கல்வியில் முன்னேறினார்.

தனது சொந்தக் கிராமங்களில் கல்வி கற்ற இடங்களிலும் முழு ஆளுமை கொண்ட மனிதனாகவும் இறைப்பற்று கொண்ட கத்தோலிக்க மகனாகவும் காணப்பட்டார் என்பது உண்மை. படிப்பை நிறைவு செய்துகொண்ட புனிதர் அன்புப் பெற்றோரின் அரவணைப்பையும் சகோதரர்களின் பாசத்தையும் அனுபவிக்க விரும்பியதால் தனது கிராமத்திற்கு 12 Km. தொலைவில் உள்ள Rampazzo லில் பட்டதாரியாக பணிபுரிந்தார். தனது சகோதரர்களால் திருத்தி அமைக்கப்பட்ட Santa maria maddalena ஆலயத்திற்கு அடிக்கடி சென்று செபத்திலும் தியானத்திலும் ஈடுபட்டு இறையுறவில் வளர்ந்தார். இதனால் Rampazzo என்ற இடத்தில் இறைபணியில் ஈடுபட இவருக்கு ஊக்கம் கிடைத்தது. இறைவனுக்கு தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆசை வளர்க்கப்பட்டது. இங்குதான் 1506ல் புனிதர் இறையியல் கற்கும் மாணவனாக இருந்தாலும் திருத்தந்தை யூலியோ II இவருக்கு நெருக்கமானவராக இருந்தமையினால் உரோமைக்குள் நுழைய அரியவாய்ப்புக் கிடைத்தது. திருத்தந்தைக்கு மிகவும் பிடித்தவராக கடமையாற்றி கொண்டிருந்தபோது ஆயர் Giovanmi Battista இவரது நெருங்கிய நண்பரானார். இக்காலத்தில் வெனின் நகரத்தை தாக்க திட்டமிட்ட திருத்தந்தை யூலியோ II செயலை ஏற்றுக்கொள்ளாத புனிதர் உரோம் நகர தலைமைகளுடன் திருச்சபை தலைவர்களுடனும் வெனிஸ் நகர அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு சமநிலை பேணியதோடு 1510ல் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடாத்தினார். தனது பணியிலே சோர்வடையாது கிறிஸ்தவர்களை ஒன்று திரட்டி கிறிஸ்தவம் நிலைத்து நிற்க அரும்பாடுபட்டார். பல்வேறுபட்ட குழுக்களை உருவாக்கி மக்களுக்கு தொண்டாற்றுவதிலும் செப தவ வாழ்க்கையில் ஈடுபடுவதிலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

திருத்தந்தை யூலியோ II வில் இறப்பிற்கு பின்னர் திருத்தந்தை லியோ திருச்சபையின் தலைமை ஆயரானார். தம் பணியை இன்னும் ஆழப்படுத்தும் நோக்கில் குருத்துவ பணியில் ஈடுபட முன்வந்து 1515 குருவாக முடிவெடுத்து 1516.09.28 ல் திருத்தொண்டரானார். 30.09.1516ல் குருவாக திருப்பொழிவுசெய்யப்பட்டு தனது முதல் திருப்பலியை நத்தார் தினத்தன்று Santha Magiore பசிலிக்காவில் நிறைவேற்றினார். 1518 இல் Santha Maria de lla misericordia என்ற வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு பணி புரிவதென புறப்பட்டார். மக்களுக்கு பணி புரிவதன் மூலம் தன்னை இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் காணிக்கை பொருளாக மாற்றினார். தனது தயாரின் சுகவீனம் அறிந்து அவரது இறப்புக்கு 15 நாட்களுக்கு முன்னரே அவரோடு இருந்து அவரை கவனித்து பணி செய்து தினமும் தாயின் அறையில்திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்தார். 15.11. 1520 ல் தாயார் விண்ணக வீட்டை நாடிச்சென்றார்.

புனிதர் ஒரு புதிய துறவற சபையை உருவாக்க விருப்பம் கொண்டு 03.05.1524இல் திருஅவையின் அனுமதிக்காக திருத்தந்தை Clement VIIக்கு விண்ணப்பம் செய்கிறார். உத்தரவு கிடைத்ததும் 14.09.1524ல் நான்கு சகோதரர்கள் முதல் முறையாக சபையில் சேர்ந்து Cleric Regulari என்று அழைக்கப்பட்டனர். இவர்களின் முதல் Mission House உரோமில் நிறுவப்பட்டது. பின்னர் வத்திக்கானுக்கு அண்மையில் உள்ள ஒரு இடத்திற்கு சென்று திருத்தந்தைக்கு உதவியாக இருந்த போதிலும் பணியில் அதீத அக்கறை கொள்ளவில்லை திருத்தந்தை யூலியோ II Eroupe ல் இருந்து புறப்பட்டு Venice வுடன் சமாதானத்தை பேணுகின்றார். இந்த யுத்தம் மக்களின் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் என்பதை உணர்கின்றார். இக்காலத்தில் குருக்கள் சபையை விட்டு நீங்கி திருமணம் செய்ய முற்பட்டனர். திருஅவையில் குழப்பங்கள் உருவாகி கத்தோலிக்க திருமறையை விட்டு விலகி சிலை வழிபாட்டில் ஈடுபட்டு மாற்றங்களுக்கு வழிவகுத்தனர். இந்நிலையில் Oratorio இதற்கு 60 பேர் சேர்ந்து கொண்டனர். Vescuvi கத்தோலிக்கர் அல்லாதவர்களும் சேர்ந்தனர். இதனால் கத்தோலிக்க திருச்சபை புத்துயிர் பெற்றது. புதிய ஒளி ஒன்று தோன்றியது. வைத்தியசாலை ஒன்றை Incurabill ல் கட்டி பணிபுரிந்தனர்.

இதேபோன்று Oratorium குழுக்கள் Venceasa, Verona, Brazia Zelo போன்ற இடங்களில் தோன்றி புது உருப்பெற்றன. உலகில் எல்லா இடங்களிலும் கிறிஸ்துவின் ஒளியை பரப்ப வேண்டும் என்பதற்காக Oratorio வை உருவாக்கி ஆவலோடு பணிபுரிந்தார். தனது சகோதர குழுக்களுடன் வாழ்ந்து செபம், தவம், தியானித்தல் போன்ற செயற்பாடுகளில் குழுவாக சேர்ந்து ஈடுபட்டார். இவரை மக்கள் தமது குருவாக ஏற்று கொண்டனர். புனித தியான வாழ்வை கண்ட பலர் வியந்தனர். ஞானதந்தையாக கடமையாற்ற விருப்பங்கொண்டு SantaMaria de papoto என்ற இடத்தில் இறைவனின் அழைப்பிற்கு ஏற்ப சாட்சியாக விளங்கினார். இங்கு சிறிய காலம் பணிபுரிந்து பின்னர் Ospefule என்ற இடத்தில் பொருளாதாரத்திற்கு ஏங்கிய சமூகத்தில் வாழ்ந்த ஏழைக் குடும்பங்களுடன் தனது வாழ்வை வாழ்ந்தார்.

நாப்பொலி மக்களின் வாழ்வோடு கலந்துவிட்ட புனிதர் காய்ச்சலினால் நோய் வாய்ப்பட்டு சாவை ஏற்று 07.08. 1547ல் இறைவனின் அமைதி கொண்டார். இவரது மரணம் நாப்பொலி மக்களது அமைதியற்ற வாழ்விற்கு அமைதியைக் கொண்டு வந்து அவர்களை ஆறுதல் படுத்தியது. இவர்களது மறு வாழ்விற்கான தனது உடல் உள்ளம் இரண்டையும் மருந்தாக்கி வாழ்வாதாரத்தை உயர்த்தி ஆன்மீக வாழ்வையும் வளப்படுதினார்.

நடமாடும் புனிதராக எண்ணப்படும் இவர் சிறைப்பட்டோர் துன்புறுவோர், வேலையற்றோர் போன்றவர்களுக்கு மறுவாழ்வு அளித்து மன அமைதியை கொடுக்கின்றார். சிறப்பாக இளம் குருக்களுக்கு ஒளியாக வழியாக நின்று இறை வழியிலே குருக்களை அழைத்து செல்லும் உன்னத புனிதராவார். குழந்தைப்பேரற்ற பெற்றோர் புனிதரின் பரிந்துரையை நாடுகின்றனர். புனித கயித்தான் முனியோர் அனைவரின் தேவைகளில் வேண்டப்படுவதால் இவரை தேவ பராமரிப்பின் புனிதர் என அழைப்பர்.




## அறிந்துக்கொள்ள வேண்டியது

ஒரு சராசரி மனிதருக்கு ஒன்று அல்லது ஒன்றரை லீட்டர் அளவு உணவே போதுமானது. அதற்கும் மேல் சாப்பிட்டால் வயிறு தன்னை விரிவுப்படுத்திக்கொள்ள முயலும். அதனால் தொப்பை உண்டாகும். அதிகக் கொழுப்பு, சக்கரை கார்போவைதரேட்டுகள் உடலில் சேரும் அதனால் பல நோய்கள் ஏற்படலாம். அளவுக்கு அதிகமாக உணவு சாப்பிட்டால் உடலில் உள்ள பாராசிம்பதிக் நரப்பு மண்டலம் உடல் இயக்கங்களை மந்தமாக்கிவிட சாப்பிட்ட உணவைச் செரிக்க வைக்க உடலுக்கு உத்தரவிடும். இதனால் தூக்கம் வரும், சோர்வு ஏற்படும்.

## 01 சமாதானம்...

அறிவுறுத்தலின்போது தெரிவித்தார்கள். தொடர்ந்து தமது கருத்தில் இந்நாடு மீண்டும்இயல்பு நிலைக்கு திரும்ப உண்மையான சமாதானம், நல்லிணக்கம் வாழ்வாதாரத்தை உருவாக்க எமது தேர்தலில் இந்நாட்டு அரசியல் தலைவர்களாக வேண்டும் என முன்வைத்த யோசனைக்கிணங்க செயல்பட்டால் மாத்திரமே முடியும் என குறிப்பிட்டார்கள். இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உலக முஸ்லிம் சங்க செயலாளர் செயிக் மொஹமட் அப்துல்லா கறீம் அலிசா ஆகியோரின் முன்னிலையிலும் ஓய்வுபெற்ற முன்னால் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க எதிர் கட்சித்தலைவர் ஆகியோரும் கலந்துக்கொண்டனர். பௌத்த தேரர்களும் இஸ்லாம் மௌவிகள் பலரும் இதில் கலந்துக்கொண்டனர்.

இம்மாநாட்டுக்கு விசேச அழைப்பு பெற்ற பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தவிர்க்க முடியாத காரணத்தினால் கலந்துக்கொள்ளவில்லை. பதிலாக அருட்தந்தை பீலி முத்துக்குட ஆராச்சி, அருட்தந்தை கமிலஸ் பர்னாந்து, ஐவன் பெரேரா அடிகளார்கள் பங்கு கொண்டனர். அருட்தந்தை பீலி முத்துக்குட ஆராச்சி அவர்கள் கர்தினால் அவர்களின் விசேட செய்தியை அங்கு வழங்கினார்.

## 01 குருத்துவ...

கொழும்பு மறைமாவட்டத்தின் 04 குருக்கள் ஆடி மாதம் 30ம் திகதி தமது 25வது வெள்ளி விழாவை - அருட்பணி மெக்சிமஸ் ரொட்றிக்கோ புள்ளே, அருட்பணி பிரகாஷ் பர்னாந்து அருட்பணி. டெரல் கூஞ்சு, அருட்பணி. கால்டன் த சில்வா ஆகியோர் கொண்டாடினர். ஒகஸ்ட் 06ம் திகதி அருட்பணி மேரியஸ் கிறிசாந்த, அருட்பணி. பொன்சியஸ் ரோனி அடிகளார் கொண்டாடுகின்றனர். கடந்த பங்குனி 26ம்திகதி அருட்பணி. கிங்சிலி ஐவன் அடிகளார், அருட்பணி. சரத் திரிமான்ன அடிகளார், அருட்பணி. தர்சன ஐயமான்ன அடிகளாரும் கொண்டாடினர்.

## 01 தேவத்தை...

உரோம் நகர் வத்திகான் கர்தினால் ஆயர் பேரவையின் தலைவர் அதிமேதகு பஸ்செட்டி ஆண்டகை விசேட விருந்தினராக பங்குகொள்வார். பாதுகாப்புக்கான கத்தோலிக்க மக்களின் முழுமையான ஒத்துழைப்பு எதிர்பார்ப்பதுடன் தேவத்தை புனித பூமியில் கூடாரம் அமைக்க முடியாது என பசிலிக்கா பரிபாலகர் அவர்கள் தெரிவித்தார்கள்.

## 01 நூற்றாண்டு விழா...

நாம் இறைவனை, 'எமது அன்றாட வாழ்வின் போராட்டம், தடைகள் அர்ப்பண வாழ்வினூடாகவே தேடுகிறோம்' என்பது பாஸ்கு ஞாயிறன்று பெற்றுக்கொண்டபாடமாகும். கடந்த பாஸ்கு ஞாயிறு அன்று எமது தேவாலயத்தில் உயிர் தியாகம்செய்த மக்கள் தமது வாழ்வின் முதலாம் இடம் இறைவனுக்கு கொடுத்து இறை அன்பு, பாசத்தை அனுபவிக்க தேவாலயத்திற்கு வந்ததினால் தமது வாழ்வை பரித்தியாகம் செய்தார்கள். நாம் இறைவனை எமது நாளாந்த போராட்டம், தடைகள் உயிர் பரித்தியாகத்தினூடாகவே தேட வேண்டும் என்பதை எமக்கு புகட்டிச் சென்றார்கள்.

கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கடந்த ஞாயிறு கபுன்கொட பங்கின் முன்னல்பிட்டிய புனித மரிய மக்தலேனா ஆலய நூற்றாண்டு விழாவில்பிரதம அதீதியாக கலந்து திருப்பலி மறையுரையாற்றும்போது தெரிவித்தார்கள். தொடர்ந்து கூறுகையில் அன்று தேவாலயத்தில் உயிர்த்தியாகம் செய்த எமது சகோதர சகோதரிகள் பற்றி கவலையும் வேதனையும் ஏற்பட்டாலும் இன்று மறைசாட்சிகளாக இறை இல்லத்தில் இருப்பதால் மனதைத் தேற்றிக்கொள்ள முடிகிறது.

பமுணுகம பங்குத்தந்தை சாந்த சாகர ஹெட்டியாரச்சி, அருட்தந்தை பீலி முத்துகுட ஆராச்சி அடிகளார்கள் திருப்பலியை ஒழுங்கமைத்தார்கள். புனித மரிய மக்தலேனா திருச்சுருவ பவனியும் அப்பிரதேசத்தல் இடம்பெற்றதுடன் திருச்சுருப ஆசீர்வாதமும் நடத்தப்பட்டது. அதிமேதகு மெல்கம் கர்தினால்ரஞ்சித் ஆண்டகையினால் நூற்றாண்டு விழா தூபி திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்த நூற்றாண்டு விழாவிற்கு பல அருட்பணியாளர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

## 02 இத்தாலி நாட்டின்...

பணிகளான உணவு, உடை மற்றும் உறையுள் போன்ற சேவைகளை ஆராய்ந்ததோடு, மட்டக்களப்பு அட்வகேட் வீதியில் புனித ஜோசப் அருட்சகோதரர்களின் தொண்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும் விசேட தேவையுடைய பிள்ளைகளின் பாடசாலைக்கு விஜயம் செய்து கலந்துரையாடினார். மட்டக்களப்பு புளியந்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று (23) நண்பகல் 12.00 மணிக்கு அருட்தந்தையர்களான சாந்தன் இம்மானுவல் மற்றும் எஸ்.நிக்சன் ஆகியோருடன் இணைந்து கூட்டுத் திருப்பலியை நடாத்தி வைத்தார். திருகோணமலையில் புதன்கிழமை (24) திருமலை மறைமாவட்டத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகவல் : சிவம் பாக்கியநாதன்

## 06 இயேசுவின்....

வேண்டுவது என்னவெனில், இங்கே இருக்கும் நாள்கள் வரை நம்மை அதற்குத் தகுதியுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வுலகில் நாம் வாழும் நாட்களில் உருமாற்றம் அடைய முயற்சிகள் எடுத்துக்கொள்ளக் கடமையுண்டு. இதில் மரியா நமக்கு ஓர் ஒப்புயர்வற்ற எடுத்துக்காட்டு. இதோ நான் ஆண்டவருடைய அடிமை என்று சொல்லி, நம்பிக்கையுடனும் கீழ்ப்படிதலுடனும் தம்மையே முற்றிலும் கையளித்து உருமாற்றம் பெற்றார்.

1. "ஆகட்டும்" என்று தமது ஒப்புதலைத் தெரிவித்து மீட்பரின் அன்னையாக உருமாற்றம் அடைந்தார்.
2. யூதா மலைநாட்டில் எலிசபெத்திடம் விரைந்து சென்று நற்செய்தி அறிவித்துத் திருத்தூதராக உருமாற்றம் அடைந்தார்.
3. கானாவூர்த் திருமணத்தில் அயலாரின் தேவைகளை நிறைவுசெய்து பொது நலத்தொண்டலாக உருமாற்றம் அடைந்தார்.
4. சிலுவையின் அடியில் நின்றபோது சாகாமலே மறைசாட்சியாக உருமாற்றம் பெறுவதற்குத் தம்மை உட்படுத்திக் கொண்டார்.
5. பெந்தக்கோஸ்தே பெருவிழாவின்போது சீடருடன் இறைவேண்டுதலில் பங்குபெற்றுத் தலைமை தாங்கித் திருச்சபையின் அன்னையாக உருமாற்றம் அடைந்தார்.

மரியன்னையின் வழிகாட்டுதலைப் பின்பற்றி நாமும் நம் வாழ்வு முழுவதிலும் நற்செய்தியின் தூதுரைப்பவர்களாகவும், பொதுநலத் தொண்டர்களாகவும், இரத்தம் சிந்தியோ, சிந்தாமலோ மறைசாட்சிகளாகவும் உருமாற்றம் பெற முனைதல் வேண்டும்.

## 10 விவிலிய வினா விடை

65. இயேசு (4:35)
66. சீடர்கள் (4:38)
67. காற்றை (4:39)
68. கடலிடம் (4:39)
69. மிகுந்த அமைதி (4:39)
70. நம்பிக்கை இல்லையா (4:40)
71. காற்றும் கடலும் (4:41)
72. கெரசேனர் (5:1)
73. தீய ஆவி பிடித்த ஒருவர் (5:2)
74. 'உன்னத கடவுளின் மகனே" (5:7)

## 02 அருட்பணி. பீட்டர்...

பணியாற்றினார். இறுதி பணித்தள பணிகளின் வேளையில் தமது சபையின் மாகாணத் தலைவரால் 1999ம் ஆண்டு இலங்கை நாட்டிற்கு அனுப்பப்பட்டார். இலங்கை நாட்டில்தமது முதலாவது பணியை, கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலய பங்கின் உதவி பங்குத்தந்தையாக பொறுப்பேற்று கடமையாற்றினார். இதனை அடுத்து 2000ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் நாள் முன்னால் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையின் பணிப்புரையின் பேரில் நமதுபங்குக் திருச்சபையின் பங்குத்தந்தையாக பொறுப்பேற்று 10 ஆண்டுகள்தம் பணியை சிறப்புடன் ஆற்றினார். பின்பு நீர்கொழும்பு தோப்பு பங்குத்தந்தையாக கடமையாற்றி, தற்போது கொழும்பு கொம்பனி வீதி செபமாலைமாதா ஆலயத்தில் பங்குத்தந்தையாக கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்.

தகவல் : சசீவ்

## 02 அருட்பணி. பிரகாஷ்...

கொழும்பு பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகையினால் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது குருத்துவ பணியை நீர்கொழும்பு கடற்கரைத்தெரு பங்கின் உதவி பங்குத்தந்தையாகவும், பெரிய வீதி உதவி பங்குத் தந்தையாகவும் கடமையாற்றி, பின்பு ஹொரணை பங்குத்தந்தையாகினார். அங்கு ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து, மலை குன்றுகளில் கல்வாரி திருப்பாடுகளைத் தியானிக்கும் ஸ்தலங்களை இவரே அமைத்தார். பின்பு அங்கிருந்து தனது உயர் கல்விக்காக 2003ம் ஆண்டு பார்டம் பல்கலைக்கழகத்திலும் (Fordham)யயோனா (Ayona Yniverciti) யிலும் திருமண, குடும்ப ஆற்றுப்படுத்துதல் முதுகலைப்பட்டம் பெற்றார். பின்பு இலங்கையில் முகத்துவாரம் புனித யாகப்பர் பங்கு தந்தையாகவும், புதுக்கடை புனித. செபஸ்தியார் பங்கு தந்தையாகவும், செக்கடித்தெரு புனித. அன்னம்மாள் பங்குத் தந்தையாகவும் சேவைபுரிந்ததுடன் ஆற்றுப்படுத்துனர்களுக்கான பயிற்சியளித்தார். பின்பு மீண்டும் பட்டப்படிப்புக்காக அமெரிக்க கலிபோனியா (Califonia Univercity), சௌத்தர் (Southern Univercity) கற்றார். இலங்கையில் ஆற்றுப்படுத்தல், உளவியல் குணப்படுத்தல் தொடர்ந்து முனைவர் பட்டம் பெற்றார். தற்போது பிலியந்தலை சுபோதி இல்ல பூரண கல்வி நிலையத்தில் பயிற்சிகளுக்கு பொறுப்பாக சேவையாற்றிக்கொண்டு, ஆற்றுப்படுத்தல், உளவியல் குணப்படுத்தல்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறார்.


தகவல் : அனசிலின்




### மணமகன் தேவை

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளி, RC, 1981ல் பிறந்த, கொழும்பு பிரபல Convent ல் கல்விகற்ற அழகிய இறைபக்தியுள்ள மணமகளுக்கு அதே மதத்தைச் சேர்ந்த தகுதியான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பெற்றோர் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். (19189)

**தொடர்புகளுக்கு : 0773431892**



### மணமகள் தேவை

கொழும்பை பிறப்பிடமாகவும், 1978இல் பிறந்த RC மதத்தையுடைய தனியார் நிறுவனத்தில் Sale Executive ஆகவும் பணிபுரியும் மகனுக்கு தாயார் மணமகள் தேடுகின்றார் (19376)

**தொடர்புகளுக்கு : 0772984512**

### சமையல்காரர் தேவை

குருமடத்தில் தங்கி வேலை செய்யத்தக்க சமையல்காரர் தேவை. 03 வருட அனுபவம். (20517)

**தொடர்புகளுக்கு : 0778032348**

### தேவை

கொழும்பில் உள்ள வீட்டில் தங்கி இருந்து சாதாரண எல்லா வீட்டு வேலைகளையும் பார்க்க பெண் வேலையாள் தேவை. சம்பளம் ரூபா 20,000 **தொடர்புகளுக்கு : 071-3985316** (மாலை 7 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்)

**குறிப்பு : உரிய பங்குதந்தையின் சிபாரிசு கடிதமும் பொலிஸ் அறிக்கையும் கட்டாயம் அவசியம்** (20680)


## 09 பாஸ்கு ஞாயிறு...

இதுவே எமது நாட்டின் உண்மைத்தன்மையாகும். இதுவே நாட்டை ஆட்சி செய்தவர்களின் கலாச்சாரமாகும். துணை ஆயர்களான J. D. அன்ரனி, மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையினரும் நீர்கொழும்பு இரங்கல் பணி அருட்பணியாளர்கள் பலரும் கலந்துக்கொண்டனர். திருப்பலிக்குப் பின்பு பாஸ்கு ஞாயிறு தாக்குதலில் உயிர் நீத்தவர்களின் நினைவுத்தூபி கட்டுவப்பிட்டி ஆலயத்திற்கு முன்பாக திரைநீக்கம் செய்து ஆசீர்வதிக்கப்பட்டது. அத்துடன் கட்டுவபிட்டி தேவாலய வளவில் மறைமாவட்டத்தினால் ஆலோசிக்கப்பட்ட புதிய மறைபாடசாலை கட்டிடத்திற்கு அடிக்கல் இடப்பட்டதுடன் உயிர்நீத்தவர்களின் குடும்பத்தினருக்கு புதிய வீட்டுத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வீடமைப்பு அமைச்சர் சதீஸ் பிரேமதாச அவர்களும் பல குருக்கள் துறவிகள் கலந்துக்கொண்டனர்.

## 12 இரத்தினபுரி

அதேபோல் இன்னுமொரு விடயமும் சொல்ல கடமைப்பட்டுள்ளேன். எமது கத்தோலிக்க மக்கள் இலங்கையில் எங்கிருந்தாலும் இன்னுமொரு இடத்திலுள்ள வறிய பங்கிற்கு தொடர்ந்து உதவிகரம் நீட்ட ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தேன். ருவன்வெல்ல தேவாலயம் புனித அன்னம்மாளுக்கு அர்ப்பணித்த தேவாலயத்தில் புணர் நிர்மாணம் செய்யப்பட்ட குருக்கள் இல்லம், பங்கு மண்டபம், மறைபாடசாலை கட்டிடம் லூர்து அன்னை கெபி, சிலுவைப்பாதை ஸ்தலங்கள், நற்கருணை சிற்றாலயம், செபமாலை கடை, கழிப்பறை போன்றவைகள் அடங்கும். இன்று இவ்வாலயத்தில் இன்று ஏறக்குறைய 1500 இறைமக்கள் அமர்ந்திருந்து திருப்பலியில் பங்கு கொள்ளக்கூடிய ஒரு வருட காலத்துக்குள் கட்டுமான பணிகள் நிறைவுபெற்று இன்று பிரமாண்டமான ஆலயமாக காட்சி அளிக்கிறது.

இப்புதிய ஆலயத்தை இரத்தினபுரி ஆயர் மேதகு. கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா OSB ஆண்டகையின் கரங்களால் ஆசீர்வதிக்கப்பட்டு 2019.07.28 ஞாயிறன்று திறந்து வைக்கப்பட்டது. திருநாள் திருப்பலியை ஆயர் மேதகு கிறிஸ்ட்டஸ் பெரேரா OSB ஆண்டகையும் பங்குத்தந்தை அருட்பணி. கிளிபர்ட் ஷேர்வின் அடிகளாரும், தமிழ்பேசும் மக்களுக்காக இந்தியாவில் இருந்து வருகை தந்த அருட்பணியாளர்கள் சவேரியார், என்டனி நீகன் ஆகியோரும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இறுதியாக புனித அன்னாளின் திருச்சுருப ஆசீர்வாதமும், பாஸ்கு 21ந் திகதி அகால மரணமடைந்த ஆன்மாக்களுக்காக ஒரு நிமிட மௌன ஜெப அஞ்சலியும் நிறைவேற்றப்பட்டது.

**"எனக்கு வலுவூட்டுகின்றவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றலுண்டு" (பிலி 4:13)**

**புனித அன்னம்மாளே எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.**

தகவல் : மேரி இருதயநாதன், இரத்தினபுரி



# லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம்

- கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள டிலாசால் துறவற சபைச் சகோதரர்களால் க.பொ.த சா/த, க.பொ.த உ/த முடித்தவர்கள், இளைஞர்கள், பெற்றோர், முதியோருக்காக நடாத்தப்படும் ஆங்கில பயிற்சி நெறி.
- கண்கவரும் ஓவியத்தைப் பார்ப்பது போன்று, இந்து சமுத்திரத்தைப் பார்த்தபடி மகிழ்ச்சியாக இலகுவாகக் கற்றுக்கொள்ள வந்து அனுபவித்துப் பாருங்கள்.

**பயிற்சியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.**

தொழில்புரிவோர், மற்றும் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஆங்கில வகுப்புக்கள் புரட்டாதி மாதம் 15ந் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்

**பயிற்சி நெறியில் உள்ளடக்கப்படும் விடயங்கள்**

1. செவிமடுத்தல்
2. கதைத்தல்
3. வாசித்தல்
4. இலக்கணம்
5. சொல்லகராதி
6. வாக்கிய அமைப்பு
7. மரபுத்தொடர்
8. நேர்த்தியான ஆங்கிலம்
9. சொல்லிலக்கணம்
10. வார்த்தை விளையாட்டு
11. கலாச்சார வாழ்க்கை மதிப்பீடு
12. ஆங்கில பாடல்கள்
13. ஆளுமை வளர்ச்சி
14. உணவுக் கருவிகளின் பாவனை முறை

**பயிற்சிக் காலம் – 3 மாதங்கள்**

புரட்டாதி மாதம் 6ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 7ந் திகதி 2019 வரை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை

(13776)

தங்குமிட வசதிகள் இருபாலருக்கும் செய்துகொடுக்கப்படும்

- விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
  அருட்சகோ. அகஸ்ரின் ஜெயந்த சில்வா, 071 – 2188551
- பதிவு செய்தலும், தரப்படுத்தலுக்குமான பரீட்சையும் 2019, புரட்டாதி மாதம் 6ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு 130, டிலாசால் வீதியில் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் நடைபெறும்.

அருட்சகோதரர். அகஸ்ரின் ஜெயந்த சில்வா F.S.C, இயக்குனர், லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம், 130, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு – 15. தொ.பேசி.இல 071–2188551

---



# வரலாற்று சிறப்புமிக்க வஹாக்கோட்டை

## புனித அந்தோனியார் தேசிய திருத்தலம்

### புனித அந்தோனியாரின் பிறப்புத் திருவிழா – 2019

தேசிய ஒருமைப்பாட்டினை மையமாக கொண்டு கொண்டாடுவதற்கு நியமித்துள்ள புனித அந்தோனியாரின் பிறப்பு திருவிழாவிற்காக சகல இனத்தவரும் சமாதானமாக ஒன்றிணைய பக்தர்கள் உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம்.

**ஆவணி மாதம் 17, 18**

**மாலை ஆராதனை : ஆவணி 17, சனிக்கிழமை, மாலை 7.00 மணிக்கு**

**திருவிழா சிறப்புத் திருப்பலி :**

**ஆவணி 18, ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு**

கண்டி மறைமாவட்டத்தின் ஆயர்
மேதகு. ஜோசப் வியானி ஆண்டகையின்
தலைமையிலும்

இரத்தினபுரி மறைமாவட்டத்தின் ஆயர்
மேதகு. கிளிட்டர்ஸ் சந்திரசிறி (பு,ஆ.ச)
ஆண்டகையின் பங்களிப்போடும்

புனித ஆசீர்வாதப்பர் சபையின் சிரேஷ்ட அதிபதி
அருட்பணி. ஷமிந்திர ஜயவர்த்தன (பு.ஆ. ச)
அடிகளாரின் பங்களிப்பிலும் நடைபெறும்.



**திருவிழாக் கூட்டுத் திருப்பலி**

ஞாயிறு காலை 06.30 (தமிழ்)
சுற்றுப்பிரகாரத்தின் பின்
நண்பகல் 12.00 மணி (சிங்களம்)

மேலதிக விபரங்களுக்கு : 066-2289210, 077-3591227

(20671)


---



# 203வது திருவிழாத் திருப்பலி

## புனித ஆரோக்கிய அன்னை ஆலயம்

### மாபோலை, வத்தளை - 2019



ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி (வெள்ளிக்கிழமை) மாலை 4.30 மணி – கொடியேற்றம்

ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி முதல் 16ம் திகதி வரை நவநாட்கள் மாலை 7.00 மணிக்கு.

ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி காலை 7.00 மணி – பங்கில் இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கான திருப்பலி கல்லறை பூமியில் நடைபெறும்.

**மாலை ஆராதனை - ஆகஸ்ட் 17ம் திகதி மாலை 7.00 மணிக்கு**

அருட்பணி. ரொபின்சன் விஜயசிங்க மொன்சிங்கோ அடிகளாரின் வழிநடத்தலில்..

**திருவிழா திருப்பலி - ஆகஸ்ட் 18ம் திகதி**

காலை 7.30 மணிக்கு அருட்பணி. கலாநிதி. கெமிலஸ் பர்னாந்து அடிகளாரின் தலைமையில் (கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனர்)

காலை சிங்கள மொழி திருப்பலியைத் தொடர்ந்து, ஆசீர்வாதமும், சிறு பவனியும் நடைபெறும்

காலை 11.30 மணிக்கு - தமிழ் மாலை 5.00 மணிக்கு - ஆங்கிலம்

பங்குத்தந்தை. அருட்பணி. ஏனஸ்ட் டி மெல்

(20674)

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்